சிவமயம்.

எதார்த்தவாதம்.

இது
திருத்தருத்தி
இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகள்
ஆதீனத்துக்குரிய
ஈசூர்
சச்சிதானந்தசுவாமிகளால்
தமது சுவானுபூதியில் உதித்தவாறு
அருளிச்செய்யப்பட்டு,
சென்னை அத்துவைத சபையார்
விருப்பத்தின்படி,
ஷை சுவாமிகள் மாணக்கர்
கோவளம். துரைசாமிநாயுடு
அவர்களால்

சை. இரத்தினசெட்டியார் அவர்களது
மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி௵ மகர௴
இதன் விலை அணு - ௪.

புத்தகவிளம்பரம்.

இதனாலறிவிப்பது யாதெனின், இகனடியிற்கண்டுள்ளபுத்தகங்களை வேண்டுவோர் சென்னை தங்கசாலைவீதியில் 191-வது கதவிலக்கமுள்ள வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, முருகேசமுதலியாரவர்களிடத்திலும், ஜெனரல் போஸ்டாபீஸ் ஹெட்கிளர்க்கு ம-ா-ா-ஸ்ரீ, கோ. துரைசாமிநாயுடு அவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டார் ஷையாருக்கு முன்பணமனுப்பாமலே வாலியூ பேயேபில் போஸ்டிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

அச்சிட்டிருக்கும் நூல்கள்.

	ரூ.	அ.	பை.
பிரபுலிங்கலீலை மூலமும் உரையும் காப்பி க-க்கு	2	8	0
சுவானுபூதிவிளக்கம். சிவகாருணியவிளக்கம்.	0	6	0
உபநிடதம் விருத்தியுரை.	0	5	0
வேதாந்த சூளாமணி உரை.	2	0	0
தசகாரிய மகாவாக்கியவுரை.	0	8	0
திருக்குத்திரிசிய விவேகவுரை.	1	0	0
உத்தமவாதம் மூலம்.	0	8	0
கைவல்லியநவநீத விருத்தியுரை (2d Edition-in the Press.)	1	4	0
சர்வமதசித்தாந்த விளக்க வினாவிடை.	1	0	0
தத்துவஞ்ஜானுபோகசாரம் (முதல்வால்யம்.)	2	0	0
சுகர் கைவல்லியம்.	0	2	0
சொரூபசாரமூலம்.	0	2	0
பிரத்தியக்ஷானுபூதிவிளக்கம்.	0	10	0
சசிவன்னபோதவுரை.	0	8	0
எதார்த்தவாதம்.	0	4	0
சொரூபசாரம் மூலமும், உரையும்.	0	8	0

இனியச்சிடப்படும் நூல்கள்.

பகவற்கீதை விருத்தியுரை.
வேதாந்த இலக்கணவுரை.

சிறப்புப்பாயிரம்.

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சான்றோருடைத் தென்றென் றருந்தமிழி னவ்வைநனி சாற்றுந்தொல்சீ, ரோன்றோவில்சீர்த்தி கெழுவழுதியர்கோன் செய்தவமற்றிது வென்றோங்கும், வான்றோய்மாடக் கூடற் புலவர் செருக்ககற்றுமாதானுபங்கி, தான்றோன்றவருந் தொண்டைநாட்டினியல்பினைத்தென்னுந்தரத்ததன்றே.

அன்னநாட்டினிலடியார் பத்திமையிற்றென வகலக்கவி யிற்கூறும், தன்னிகரில்சேவையர்கோன் மரபினவொன்றெவ் வுலகுஞ் சாற்றுஞ்சீர்த்தி, துன்னியவே ளாண்குலத்தோர்க் கிடனுய சூளும்பேட்டினுக்கணித்தாய், பொன்னகரமென விலங்கு மீசுரொன்ருெருநகரம் பொலியுமாலோ.

இந்நகரிலாத்திகமோங்கிடநாத்திகக்கரிகளடைவினேங்கத், தென்னர்மொழி வடமொழியினுபகிடதச் செழும்பொருளிற் செருக்கதெய்த, மன்னுமணிமாமுதலா வகுத்துரைக்குமெண்சித்தி மரபினுயிற், றன்னைநனிவிளக் கொருசித்தியின் முனமொத்தகையெனவேசாற்றவம்மா.

சூதகற்றுந் திருமறையின் முடிபனைத்தும் வாதராயணனன்றெருகுத்திட், டாதரவினஞ்ஞான்று வடமொழியினுரைத்தாங் கின்றன்பினன்னேன், தீதிலருந்தமிழ்நாடுசெய்தவத்தான் வந்ததெனச் செப்பவேமெய்ப், போதமெனுந் தானிவனோர் சச்சிதானந்த னெனப்புவிவந்தானல்.

கடவுள் துணை.

புத்தகவிளம்பரம்.

இதனாலறிவிப்பது யாதெனின்,இதனடியிற்கண்டுள்ளபுத்தகங்களை வேண்டுவோர் சென்னை தங்கசாலைவீதியில் 191-வது கதவிலக்கமுள்ள வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, முருகேசமுதலியாரவர்களிடத்திலும், ஜெனரல் போஸ்டாபீஸ் ஹெட்கிளார்க்கு ம-ா-ா-ஸ்ரீ,கோ. துரைசாமிநாயுடு அவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டார் ஷையாருக்கு முன்பணமனுப்பாமலே வாலியூ பேயேபில் போஸ்டிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

அச்சிட்டிருக்கும் நூல்கள்.

	ரூ.	அ.	பை.
பிரபுலிங்கலீலை மூலமும் உரையும் காப்பி க-க்கு	2	8	0
சுவானுபூதிவிளக்கம். சிவகாருண்ணியவிளக்கம்.	0	6	0
உபநிடதம் விருத்தியுரை.	0	5	0
வேதாந்த சூளாமணி உரை.	2	0	0
தசகாரிய மகாவாக்கியவுரை.	0	8	0
திருக்குத்திரிசிய விவேகவுரை.	1	0	0
உத்தமவாதம் மூலம்.	0	8	0
கைவல்லியநவநீத விருத்தியுரை (2d Edition-in the Press.)	1	4	0
சர்வமதசித்தாந்த விளக்க வினாவிடை.	1	0	0
தத்துவஞ்ஜானுபோகசாரம் (முதல்வால்யம்.)	2	0	0
சுகர் கைவல்லியம்.	0	2	0
சொரூபசாரமூலம்.	0	2	0
பிரத்தியக்ஷானுபூதிவிளக்கம்.	0	10	0
சசிவன்னபோதவுரை.	0	8	0
எதார்த்தவாதம்.	0	4	0
சொரூபசாரம் மூலமும், உரையும்.	0	8	0

இனியச்சிடப்படும் நூல்கள்.

பகவற்கீதை விருத்தியுரை.
வேதாந்த இலக்கணவுரை.

சிறப்புப்பாயிரம்.

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சான்றோரையுடைத் தென்றென் றருந்தமிழி னவ்வைநனி சாற்றுந்தொல்சீ, ரோன்றோவில்சீர்த்தி கெழுவழுதியர்கோன் செய்தவமற்றிது வென்றோங்கும், வான்றோய்மாடக் கூடற் புலவர் செருக்ககற்றுமாதானுபங்கி, தான்றோன்றவருந் தொண்டைநாட்டினியல்பினைத்தென்னுந்தரத்ததன்றே.

அன்னநாட்டினிலடியார் பத்திமையிற்றென வகலக்கவி யிற்கூறும், தன்னிகரில்சேவையர்கோன் மரபினவொன்றெவ் வுலகுஞ் சாற்றுஞ்சீர்த்தி, துன்னியவே ளாண்குலத்தோர்க் கிடனுய சூளும்பேட்டினுக்கணித்தாப், பொன்னகரமென விலங்கு மீசூரொன்றொருநகரம் பொலியுமாலோ.

இந்நகரிலாத்திகமோங்கிடநாத்திகக்கரிகளடைவினேங்கத், தென்னர்மொழி வடமொழியினுபகிடதச் செழும்பொருளிற் செருக்கதெய்த, மன்னுமணிமாமுதலா வகுத்துரைக்கு மெண்சித்தி மரபினுயிற், றன்னைநனிவிளக் கொருசித்தியின் முனமொத்தகையெனவேசாற்றவம்மா.

சூதகற்றுந் திருமறையின் முடிபனைத்தும் வாதராயணன் றொகுத்திட், டாதரவினஞ்ஞான்று வடமொழியினுரைத்தாங் கின்றன்பினன்னோன், றிதிலருந்தமிழ்நாடுசெய்தவத்தான் வந்ததெனச் செப்பவேமெய்ப், போதமெனுந் தானிவனோர் சச்சிதானந்த னெனப்புவிவந்தானல்.

வாதகால்வகையெனவத்தருக்கநூல்வகுத் தநெறிமாழாங்தே ங்க, வாதமெனைத் துங்காரியகாரணமென் வகையினனிவகு த்துக்காட்டி, எதிலொருகால நான்கினுந்தனைக் காட்டெடதார் த்தநிலை யிதுவென்றப்பேர், ஆதரவினினிதோங்க வொருநூ லெம்மோர்க் கன்பினளித்திட்டானல்.

சொற்றவிந்நூனமக்கன்றியார்க்கு மரும்பயன்படுமோதோன் றுதற்கீண், டுற்றவகையாதென வன்னவனடித் தொண்டா விகலற்ருேங்கிநிற்கும், அத்துவிதச் சபையினர்கேட்பக் கனி வினச்சியற்றியளித்தானம்மா, பொய்த்துவிதச்சழக்ககல்கோ வளத்துரைசாமிக்குரிசில் புரைகடீர்த்தே.

இந்நூலாசிரியர் மாணாக்கர்

அ-முநிசாமிநாயகர் அவர்கள்

இயற்றிய

நேரிசைவெண்பா.

சதார்த்தந்தா னென்றுணரச் சாதனமா யிந்நூ
லெதார்த்தவா தப்பெயரா லீங்கே—வுதாகரித்தான்
பாருறையீ சூரத்தி பாதிப் பிரியனெனும்
பேருடையா னெங்கோன் பிறர்க்கு.

திருமுக்கூடலில் சதாநிஷ்டராய் எழுந்தருளியிருக்கும்
முனியப்பசுவாமிகள்மாணாக்கர்
மணிமங்கலம்,

திருவேங்கடமுதலியார் செய்த

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அத்தருக்க நூலறையும் வாதம்போ லாகாம லவனி யுய்யப், பொய்த்துவிதச் சழக்கற்று மெதார்த்தவா தப்பெயரிற் புனைந் தளித்தான், வித்தகமாந் தனையுணர்த்த மான்காட்டி மான்ப டுக்கும் வேடமென்ன, இத்தரணி வருசச்சி தானந்த மாதவ னுள் ளிசைந்திட் டம்மா.

இந்நூலாசிரியர் மாணாக்கரிலொருவராகிய

சேலம்-திரு-கோமளேஸ்வர முதலியார்

இயற்றிய

நேரிசைவெண்பா.

பதார்த்தவாதப் பண்பதனைப் பாலிக்கு ஞான
எதார்த்தவாத மென்றொருநூ லீந்தான்—எதார்த்தந்
தனையருளுஞ் சச்சிதா னந்தகுரு சாமி
தனக்குளதோ கைம்மாறு தான்.

இயற்றமிழாசிரியராகிய

கோ - இராசகோபாலபிள்ளையவர்கள் மாணுக்கர்

இராயபுரம்-சேணியப்பநாயகர் இயற்றிய

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருந்தம்.

சுவதிலதமென வொளிரீசூர்க் குரவனன்றேற்-சுத்தசூ ணிய மாயத்தூர்ந்து துறைகாண, அவதியிலா தறைதரும்வே தாந்தசாகை - யருமறையி னிதுசாறும் யாவனொளிதீர்ந்தார், பவவலையாற் பவவமதைப் பாயமுடிப்பெய்த - பதமலரோன் எதார்த்தவாதப்பேர்நூல்வனைந்தான், தவவடிவர்தாழ் சொப் பிரகாசதனிச் சுடரோ-தகவுருக் கொண்டுற்ற சச்சிதானந்தன் மன்னே.

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் மாணுக்கர்

மணவூர் - முநிசாமிமுதலியார் பாடிய

நேரிசைவெண்பா.

ஞானகா ரன்சச்சி தானந்த னுனிலத்திற்
ருன தரவிற் றகவுரைத்தான்—தானும்
பதார்த்த நிலையைப் பகுத்துணர்த்த வல்ல
வெதார்த்தவா தத்தை யியைந்து.

இந்நூலாசிரியர் அடியார்களில் ஒருவர்

பவழை. தங்கவேல் ஐயரியற்றிய

நேரிசைவெண்பா.

அறிவின்பந் தானு மனுபூதி பெற்றுப்
பிறிதென்ப தின்றிப் பிறங்கும்—நெறியொன்
றெடுத்தியம்பு மாமிவ் வெதார்த்தவா தத்தைப்
படித்துணர்ந்தார் வெல்வர் பகை.

விருத்தம்.

இன்னண மாயதோ ரிணையி னூலினைத்
தன்னனு பூதியிற் சாற்றின னீசூர்
நன்னகர் சச்சிதா நந்த னங்குரு
அன்னவ னடிபணிந் தரியவீ டடைவாம்.

இந்நூலாசிரியர் அடியார்களில் ஒருவர்.

ஆறுமுக முதலியார் இயற்றிய

நேரிசைவெண்பா.

பேதவா தத்தின் பிணக்ககல நான்குமா
வேதத்தி னுட்பொருளு மீதோங்க—வோதும்
எதார்த்தவாத மிந்நூ லிசைந்தளித்தா னெங்கோன்
நிதார்த்தசச்சி தாநந்தா னின்று.

சிவமயம்.

எதார்த்தவாதம்.

சொருபவணக்கம்.

மண்ணுதி தத்துவத்தை மாறு தறிவதனைக்
கண்ணாரக் காணவிது காட்டுநூல்—நுண்ணியதா
யென்னுளத்தி னின்றுணர்த்த வேகபரி பூரணத்தின்
துன்னுமலர்த் தாளே துணை. (க)

குருவணக்கம்.

என்னையன்றித் தான்வேறன் றென்னையக லாதிருந்திங்
கென்னை யெனக்களித்தா னேதுகுறை—மன்னும்
பிறைசையரு ணசலப்பேர்ப் பெம்மான் குரவன்
நிறையருளே மானிடமாய் நின்று. (உ)

நூற்பெயர்.

எதார்த்தநிலை வாதிப்ப திந்நூ லதனு
லெதார்த்தவா தப்பெயரா யேற்கு—மெதார்த்தநிலை
யாயாது கொள்வார்க் ககற்றும் விபரீத
மோயாவா தத்தா லுணர். (௩)

அவையடக்கம்.

தன்னேட்டி லேதெளிந்தார் தாமேயிந் நூலேற்ப
ரொந்நூல்வல் லோரேனு மீதேலார்—சொன்னே
னெவருங்கைக் கொள்ளா விலக்கணங்க ளென்னி
னுவப்பரோ கண்டென் னுவப்பு. (ச)

மண்ணுருவாய் நின்றுழன்று மண்ணுருவி லேமயங்கி
மண்ணுருவாய்ப் போகு மதியிலிகாள்—மண்ணுருவை
பெண்டுபிள்ளை சுற்றம் பெரியர் சிறியவரொன்
றெண்ணுமறி வாமோ விவை. (க)

நானி முதலான நானா வுருவங்க
ளேனோ துயிலுங்கா லில்லாமை—ஞானமாய்க்
காணு மவனிருக்கக் காணா வகையென்னோ
நாணமிலா வாயே னமக்கு. (உ)

கரணம் புலனின்றேற் காண்பானின் வேறா
கரணந் தொழிலொன்றா கற்றும்—புரணந்தா
னொன்றேயன் றென்னி லொழியாக் குதர்க்கமதா
நன்றாயுன் னுள்ளேநீ நாடு. (௩)

பாரா ததினாலே பாராதி தோற்றிலையேற்
பாராத தேனின்பப் பாகுலகைத்—தீராக்
கவலை தணிப்பதற்கேற் காண்பானேன் மீண்டுஞ்
சிவன்செயலீ தென்றானுட் டேர்ந்து. (௪)

தேகாதி தோற்றத்தாற் சிவே சுரனொன்பாய்
தேகாதி தோற்றமன்றிச் செப்புவையோ—தேகாதி
தோன்று மிடமெங்கே தோன்றா விடமெங்கே
யூன்றிப்பார்த் தங்கேநீ யோது. (௫)

எல்லா மறிவமிச மேனுமறி வன்றென்ன
வெல்லாருங் காணா திருப்பானே—னெல்லா
நினைப்புமறப் பாகா நிலையுருவம் பெற்றால்
அனைத்துருவு நாமென் றறி. (௬)

அனைத்தருவு நாமே லனுபவத்தி லெங்கே
நினைப்பன்றி யெங்கே நினைப்போ—மனைத்தருவுங்
காணோமே வேறாகக் கட்டுடைத்துத் தோண்டுங்கால்
வீணாமே வேத விதி, (௭)

பக்குவத்தா லன்றிப் [illegible]
பக்குவத்தா லன்றிப் பலவாகா—பக்குவமுஞ்
சேட்டையா லன்றியெங்ஙன் சேட்டிக்கு மாங்கவையு
மீட்டுவா னன்றி யிரா. (௮)

சேட்டை யுறுப்பிலிக்குச் சேட்டிப்ப தெங்ஙனே
ஈட்டுவா னன்றியுண்டோ வெங்கேனுஞ்—சேட்டை
புரிவானிற் காணுப் புரிபொருளிற் காணின்
மருணீங்கி வாரா மதி. (௯)

புரிவானிற் காணும் புதுமைதா னுண்டோ
புரிவானின் வேறு புதுமை—புரிவான்
புரிதலிரண் டொன்று புரிதலுனின் வேறு
வரிதரிதி தென்று னறிந்து. (௧௦)

புரிதரு னென்றேற் புரிபொருளு மொன்று
புரிவானைக் காணிற் புகலா—விருவகையுங்
காணினிலை யென்பையேற் காணு முனமுண்டோ
காணினிலை யெப்போதுங் காண். (௧௧)

காணி னுலகில்லை காணு விடத்துண்டேற்
காணி னிவற்றெதிராக் காண்பானேன்—காணு
மறியாமை யாலே யறிவுருவா நம்மை
யறிவாயுன் னுள்ளே யமர்ந்து. (௧௨)

அறியாமை யாதோ வறிவானின் சேட்டை
யறிவாவ தேதென்னி னற்றன்—றறிவே
யறிவானே வென்னி னறியாப் பொருளன்
றறிபொருளு மன்றென் றறி. (௧௩)

காணுமவ னொன்றுங் காணுலக மேதென்றுங்
காணும்வகை யீதென்றுங் கண்டாயேற்—காணுலக
முன்னையன்றி யுண்டோ வுளதேல் விவேகிக்குப்
பொன்னையன்றி யுண்டாகும் பூண். (௧௪)

காண்பா னறிவெங்[illegible]யா
காண்பானுட் டோற்றுலகேற் காணுவே—மாண்பறிவிற்
சத்தாதி யைந்துஞ் சடமாதி யைந்துலகி
ஞெத்தே யிருப்பதுநீ யோர். (கரு)

ஒருபோது தோன்றி யொருபோது தோன்றுப்
பெரிதா முலகப் பிரமை—யிருபோதும்
நாமிருக்க நம்மையே நாங்கண் டிடினிலையேற்
காமமயக் கெங்கேநீ காண். (கசு)

எல்லாம் வெளியொளியா யேகவறி வாமென்னி
னெல்லாப் புலன்கரண மில்லாமே—யெல்லா
முபாதியா னென்னி னுபாதிவரு வானே
னபாவத்தா னுமென் றறி. (கஎ)

ஒருபோது தூல மொருபோது சாயை
யொருபோது பாழிவ் வுலகந்—திரிபோதும்
மாறுத நம்மயக்கோ மாறு மதனியல்போ
தேறுத தென்கொண்டோ செப்பு. (கஅ)

உலகுக்கேற் றூல முளதோ வுணர்விவ்
வுலகுக்கேற் சாயை யுளதோ—நிலையுணர்வு
பார்க்குரித்தேற் பாழென்னிற் பார்க்குமோ பாமரா
பார்க்கிலுணர் வன்றியுண்டோ பார். (க௯)

தூயவுணர் வன்றியுண்டேற் றூலாதி தோற்றங்க
ளாயவவை யன்றியுண்டா மாகுலகங்—காயத்
கதம்புறத்திற் காண லறிவன்றி யுண்டோ
வகம்புறநீ யாகா தறி. (உ0)

அறிவுக்கேற் ரேற்ற மணுகுமசத் தாதி
மறிவுக்கு வேறெனினு மாகா—பிறிதென்றூற்
காரணந்தான் யாதென்னிற் காரணநீ யாமுன்னிற்
காரணனா னுமோ கரை. (உக)

தூலாதி நீயாயிற் றூலாதி யாய்த்தோன்றுந்
தூலாதி யாகாயேற் றோன்றுவே—சிலமாஞ்
சிற்சொருப நீயாயிற் சிற்சொருப மாவிளங்குந்
தற்சொருப மேதான தால். (உஉ)

சாக்கிராதி நிட்டையினிற் றானேயிவைகண்டாய்
சாக்கிராதி நிட்டையுநீ தானுகும்—சாக்கிராதி
தோற்றமன்றி யில்லையாற் சொல்லவிட மெங்ஙனே
வாற்றலிது சத்தியமே யாம். (உ௩)

அறிபொருளை யன்றி யறிவுதயங் காணேன்
அறிபொருள்வே றன்றென்னி னுமோ—வெறியா
கயிற்றரவு வேறுநின் காட்சிதான் வேறு
கயிற்றரவு போலபினங் காண். (உ௪)

அறிவுருவ மென்னி னசத்தாதி யாகு
மறிவுருவ மாமென்னி னற்றே—புறங்காணிற்
காணும்வகை யெங்ஙனே காட்டுமவ னலன்றிக்
காணுயுன் னுலனெநீ காண். (உ௫)

காட்டு மவனேடு காணுமவ னிரண்டோ
நாட்டமொன்றே யாயினும்பொன் னுடாவே—காட்டாக்காற்
சத்தொன்றே யாயினுந்தன் சத்தி பலவாமே
சத்தொழிய வுண்டோ தவிர். (உ௬)

விசேட சம்பாடனை.

மண்ணுடலை நானு மதித்துக்கா மப்பசியா
னெண்ணி யிடிவேனை யீடேற்ற—யண்ணலே
சத்தமுத லைந்தறியுஞ் சத்தியதற் கில்லையாற்
சத்துருவ மேதாகுந் தான். (உ௭)

ஐந்தறிவுந் தாமென்னி னைந்தாவ தேதறிவுக்
கைந்திடச்சேட் டைக்குணத்தா னைந்தாமே—விந்தவெளி
பத்தோ திசையதனுற் பார்க்கி னுணர்வெளியா
மொத்ததுநீ யாமென் றுணர். (உ௮)

உற்றுணரின் மெய்யே யொருதொழிலு மில்லையாற்
பற்றுமனந் தானென்னிற் பாடமோ—சொத்தேட்
டெழுத்தோ பிதற்றே வெதுதானோ வுன்னுள்
ளெழுத்தோகண் கண்டோ விசை. (௨௯)

ஐந்தறிவுந் தாமே யறியா தனையன்றி
யைந்தறிவு மாகா தறியுமே—யெந்தவுரு
காணி னதுவாங் கணத்திற் பலவுலகாம்
வீணில் வழக்கேன் விளம்பு. (௩௦)

பாலன் கதைபோலும் பாவனையால் வாதித்தல்
பாலன் கதையாகா பார்வைக்கேற்—றால
முதலோ செயரூனோ முற்றுணராச் சொல்லோ
வெதுதானோ மற்றிங் கிது. (௩௧)

அருவப் பொருளங் கறியப் படாதே
லுருவப் பொருளெங் குணரு—முணரி
னறிந்து மறியா யனுதினமு நின்பான்
மறந்துருவப் பேற்றான் மனம். (௩௨)

ஐயா வதுமெய்யே யாங்குருவம் வாராவே
பொய்யா மவையெங்ஙன் போந்தவெனிற்—செய்யா
வுருவல்ல செய்த வுருவல்ல பூதத்
துருவல்ல வாகார மோர். (௩௩)

அவ்வடிவு போலங் கறிவதறி யாதென்னை
யவ்வடிவே சத்தென் றறிதலா—னவ்வடிவுக்
கன்னியமு மன்றங் கறிவே சடசித்தா
மன்னதும் பொய்யென் றறி. (௩௪)

அன்னதும்பொய் யென்னி னனைத்துருவுங் காண்பதெதிங்
கன்னதுமெய் யென்னி னறிபடா—தென்னை
யிருவகையு ளேதுண்மை யிங்குணர்வ தன்றி
யுருவருவங் குண்டாயி னோது. (௩௫)

உணர்வெளியே ய[illegible]

லணிமாதி செய்கைதமக் காதி—புணர்சீவன்
என்று லெதுவெங் கிருப்பிடமென் செய்கைகுணம்
ஒன்று லறியே னியம்பு. (௩௬)

உடலளவே தானென் றுறுதித் திடங்கொண்
டுடலளவா யின்புற் றுழலு—மடமை
சிதாபாசன் றானஞ் சிதாகாசஞ் செய்கை
சதாகாலஞ் சஞ்சலமே தான். (௩௭)

நற்குணமுந் துர்க்குணமு நாடி னதனியல்பே
சற்குணத்தோ டொன்பதிது சாற்றவே—நற்குணத்தாற்
போகுமுட லின்றுயிர்தான் போந்திருந்த துண்மையாற்
சாகுமுட லென்றுன் றலம், (௩௮)

உடலிடமா மென்னி னுடல்விட்டேன் போகு
முடலைப் பிரிந்ததனு ளேறுதி—லுடலாகா
தெவ்வுடல்கொண் டேனு மிருப்ப ததனியல்பே
யவ்வுடலு மாங்காங் கறின். (௩௯)

ஒழிவுதா னென்றே வொழியின் வினைதா
னொழியாதோ வவ்வினையு மோடும்—விழைவுற்றுற்
போமோ விதுதானும் போகுந் தனைக்காணி
னாமோ விதுவு மறை. (௪0)

அறிவை யறிவ தருமை யெனினி
யறிவுக்கு வேறே வனைத்தும்—பிறிதாகா
தெங்கெங்குந் தானு யிலகு மறிவாயின்
அங்கெங் குடலுண் டறை. (௪௧)

அப்போ திலையென்னி னப்போ தொழிந்ததோ
அப்போது தோற்றிலையே லப்போது—செப்பரிய
ஞானோ தயத்தாலோ நாடாமை யாலென்னின்
ஞானோ தயத்தோடு நாடு. (௪௨)

அவ்வாறே னென்[illegible]றில்லை
யவ்வாறு முன்காணி னுங்குண்டோ—எவ்வுடலு
மெப்போதும் பார்த்திருக்கி னெப்போதுஞ் சிற்சொருப
மெப்போது மெவ்வுடலு மில். (௪௩)

காரணத்தைக் காணாது காரியத்தைக் கண்டொத்த
லாரணத்தின் சம்மதமோ வாகாதேற்—பூரணமாஞ்
சிற்சொருபந் தானே சிதாபாசன் றனென்னிற்
சிற்சொருப மாமோ சிதைந்து. (௪)

சிதைவுக் கிடமில்லை சிற்சொருபந் தன்னிற்
புதைவுக் கசைவு புகாதே—சிதைவாகக்
காணி னுணர்வெளியாக் காணி னஃதொழியும்
வீணிற் புறம்போக்கு விட்டு. (௪௫)

அகம்புறந்தா னெங்கே யனைத்துலகு மெங்கே
யிகபரந்தா னெங்கே யிலையே—சுகவெளியைக்
காணா முனமுண்டு காணா தலைவோர்க்கு
வீணார வீணில் விழைந்து. (௪௬)

கனவில் விழித்தோர்க்குக் கண்டனமெய் யாமேற்
நனவில் விழித்தோர்க்கு நண்ணு—மனைத்துண்மை
யென்று லெதுமெய் யெதுபொய் யெனவாய்த
னன்று முனக்குறுதி நாடு. (௪௭)

எல்லாஞ் சுயஞ்சோதி யென்பதுதான் சத்தியமே
எல்லா மிரவியாதி யென்செய்ய—வில்லாயி
னெப்பொருடான் கண்விளங்கு மேதே தெதுசெய்யு
மப்போ திலையே யது. (௪௮)

முதனீ விகாரிக்கு முற்றுலக மாங்கே
யதனற் சுயஞ்சோதி யாமே—கதிராதி
யென்னி னதுவாமோ வேகபரி பூரணமா
யுன்னி லதுவா யுறும். (௪௯)

அறிவைவிட் டொன் [illegible]
லறிவை யறியா தறியின்—பிறிதாகு
மப்போ தனைக்காணி னப்போதும் வேறில்லை
யெப்போதுங் காணி லிலை. (௫0)

என்னாணை யென்னாணை யேகபரி பூரணமா
யென்னைச் சுயஞ்சோதி யென்றறிந்தேன்—இந்நா
ணிலத்திரிபா னீர்போ னிலையழிந்தேன் வேறாய்ச்
சொலத்தகுங்கா ணன்னியமுஞ் சொல். (௫௧)

நிலையழிவு தானுன்னி னின்னால்வே றாமோ
நிலையுலகா னென்னி னிகழா—திலையதனாற்
றாக்கற் றிருப்பானேன் சாதனமேன் வீணாக்கோ
தாக்குவிட யத்தவிப்பாற் றான். (௫௨)

விடய முளவாக வீண்சா தனையேன்
விடயசுக மன்றியுண்டோ வேறே—கிடையாதே
யிப்படிநான் கண்டிருக்க வெப்படிதா னில்லையென
றப்புமொழி யாமே தவிர். (௫௩)

என்றா லறிவன்றி யெங்கே விடயசுக
மின்றேல் விடயந்தா னில்லாகும்—துன்றுசுக
மெப்போ தறிவில்லை யெப்போ திலைவிடயம்
எப்போது மில்லை யிவை. (௫௪)

என்று மறிவில்லை யென்றா லஃதெங்ஙன்
துன்று விடயசுகந் துய்த்திலையே—நன்றுறக்கத்
தோதிற் கனவங் குணர்ந்தெழுந்து சொல்வதெது
பூதப் பழக்கம் புகல். (௫௫)

ஆங்குணர்ந்து சொல்வதஃ தப்போ தறிந்திலமே
யீங்குவிழித் தோதலஃ திவ்வறிவேற்—பாங்காய்நின்
றிப்போதிங் கெவ்வண்ண மிச்சாஞா னக்கிரியை
யப்போதங் கவ்வண்ண மாம். (௫௬)

ஆங்கே விழித்தோரு ... ய்யாகு
மீங்கே விழித்தோருக் கில்லையே—யீங்குருக்கள்
பாழான போதிலையேற் பாழில் விழித்தோர்க்குப்
பாழும்பொய் யாமேநீ பார். (ருஎ)

மாணாக்கன்கூறல்.

எப்போதுஞ் சாட்சியா யெங்கு மொருபடித்தாய்த்
தப்பாது மாறாது தானறியு—மெப்போதுங்
கண்டவவை யாகாது காணு மதிசயத்தை
விண்டொக்கக் கண்டேன் விழைந்து. (ருஅ)

அவ்வறிவி லெவ்விடய மாகு மெனவறிந்தே
னவ்விடய மாங்கே யழிதலா—லவ்வறிவில்
வேறுருவு மாகா விழைவொழிவி னைக்காணிற்
றேறுமறி வேயொளிருஞ் சென்று. (ருக)

தன்னிடத்திற் றானே சராசரமாய்த் தோன்றிநின்று
தன்னிடத்தைக் காணிற் றனிச்சுடராம்—என்னே
யறிவிற் புறங்காணே னன்னியமுங் காணே
னறிவின் மயக்கனைத்து மற்று. (சூ0)

அறிவாவ தின்ன தறிந்தேனே நின்று
லறிவுக்குக் கைம்மா றறியேன்—பிறிதொன்று
மென்று னனவி னிலக்கணந்தா னென்னையெனப்
பொன்று திருக்கும் பொதிந்து. (சூக)

எதைநீ யறிவென்று யேகவெளி தன்னை
யெதைநீ வெளியென்று யென்ன—சிதையாத்
தெரிவுமய மாமதனைச் சித்தத்துட் டேனைத்
தெரியவஃ தெங்ஙனே செப்பு. (சூஉ)

உணர்வெளியே சிவ னுணர்வெளியே யீச
னுணர்வெளியே பாசத் துவங்கை—யுணரி
னுணர்வெளியே தூல முணர்வெளியே சாயை
யுணர்வெளியே பாழங் குறும். (சூரு)

உணர்வெளியா மீ[illegible]
முணர்வெளியின் வேறன் றௌிரு—முணரி
னுபாதி மயக்கா லொழியாப்பாழ் போலா
முபாய நமக்கெங் கறும். (௬௪)

தன்மையு முன்னிலையுந் தானே படர்க்கையுமா
யன்மையுமாய் நின்றதெங்கு மவ்வெளியே—தொன்மையதாய்
ஆண்பெண் ணலியென் றனேக விதமாகக்
காண்பனவு மவ்வெளியே காண் (௬௫)

இச்சாஞா னக்கிரியை யிவ்வெளியே யவ்வுருவும்
நிச்சயமாக் காணளவு நீங்காவே—துச்சமறக்
கண்டுணர்ந்த காட்சிக்குக் காணு வஃதன்றிப்
பண்டுணர்ந்த வாசனையும் பட்டு. (௬௬)

துச்சமிர் வாச்சியமுந் தொல்லுலக நித்தியமும்
எச்சமயத் தோர்க்கெங்க னில்லாகும்—நிச்சயமா
யவ்வெளியே தானென் றறிந்ததுவா மாரூடர்க்
கெவ்வண்ண மாகு மிவை. (௬௭)

சிற்றறிவும் பேரறிவுஞ் சிந்திக்கி னவ்வெளியே
முற்றறிவாய் நின்றோர்க்கு முட்டிலையே—கற்றதனு
லாய பயனென்னை யாகாத போதறிவாய்த்
தூயவர னேயர்க்குஞ் சொல் (௬௮)

இவ்வெளியின் வேற்றுமைபோ லிங்குருத்தான் கொள்வதனை
யவ்வெளியாய்க் கண்டிருக்கி னுங்கதுவா—மிவ்வாறு
காணி னுணர்வெளியே காணர்க்கு வெவ்வேறாய்ப்
பூணிப் பொறுத்தார்க்குப் போம். (௬௯)

ஏதுதானே கூடத்த னேதோ பிரமம்
ஏதுதா னயிக்கமெனி னெங்கும்—புதிதாகப்
பார்க்குந் தெரிவுதனைப் பார்ப்பதுதான் கூடத்தன்
யார்க்குந் தெரியா திது. (௭௦)

அத்தெரிவு தானே [illegible]மாய்
எத்திசையுங் காணு திலகுமே—யத்தருண
மாகும் பிரமந்தா னவ்வெளியே தானுத
லாகு மயிக்க மது. (எக)

அவ்வெளியே கூடத்த னவ்வெளிதானேபிரம
மவ்வெளியே தானேக மாகுமே—யிவ்வெளியி
லித்தனையுங் காணுதா ரெவ்விதத்தா லும்வழுக்கித்
தத்தித் தவழ்வாரோ தான். (எஉ)

எவ்வுயிர்தா னெம்முயற்சி யெவ்வாறு தான்செயினு
மவ்வவற்ரு லின்ப மடையாவே—யிவ்வெளிவிட்
டென்ரு லஃதெங்ங னின்பறிவின் பாலதோ
வொன்ருனு மில்லை யுணர். (எஙு)

அவ்வறிவே யெவ்விடய மாயிற் கிடையாதோ
வவ்விடயந் தானே லழியுமோ—வவ்விடயத்
தின்புற் றிருக்கிலையோ வின்புற்ரு லேனலைவர்
துன்பக் கடலின்கட் டோய்ந்து. (எச)

துன்பமறி யாவிடயந் துய்ப்பாரு மில்லையோ
துன்பமறி யாவிடயஞ் சொல்லளவே—யின்பமில
யப்போதப் போதிலையோ வப்போதப் போதுளதின்
பப்போலி யன்ருே பகர். (எரு)

அவ்வின்ப மாறிலையே யவ்வண்ணஞ் சொல்வானே
னெவ்விடயந் துய்ப்பானே னென்வேண்டி—யெவ்வெவரு
மெப்போ துபசாந்த மெய்துமென வேண்டியே
லெப்போ தெவரடைந்தா ரில். (எசு)

ஏனே விடயத்தி னின்புற்றிருப்பார்க
ளேனே திருத்திதா னெய்திலரோ—வானேரு
மெய்திலரோ வென்னி னிடையூறெப் போதிலர்தா
மெய்தாரோ யாரு மிதில். (எஎ)

எய்தினர்போ லேமாந் திருப்பா விவ்வறியார்
எய்தா தறிவன்றி யெங்கேனு—மெய்துமெனின்
மூடப் பிதற்ருகு முற்றுணர்ந்தோர் சொல்லாரோ
நாடு மெலும்பதுபோ ஞய். (எஅ)

எதார்த்தவாதம்.

அவ்வெளியே யின்பமெனி னல்வெளிவிட் டேனலவர்
அவ்வெளியைக் கண்டங்க ளாக்கினதால்—அவ்வுணர்வும்
ஆங்கவைபோ னின்றுணரு மாங்கதுபோ லாமின்பம்
ஆங்கவைநின் ருேராமை யால். (எகூ)

நினைப்பு மறப்பிடத்தி னீங்காக் கனவி
லனைத்துருவு மாயழியு மாங்கே—இனைத்துணையு
மில்லாச் சுழுத்திக்க ணெவ்வுருவும் போயினவோ
எல்லாம்போந் தாலன்ருே வில். (அ0)

நினைப்புமறப் பென்னை கிறைவெளியைக் கொண்டங்
கனைத்துருவுங் கோட லழிதல்—அனைத்தென்னிற்
செய்வான் கருவி செயலிடந்தான் காலமொடு
செய்பொருளா றெங்கேநீ செப்பு. (அக)

செய்வான் முதலாறுஞ் சேதனமில் லாவெளியின்
மெய்போலத் தோற்றலன்றி வேறில்லை—ஐயாகேள்
பந்தமுத்தி யெங்ஙனே பாவனைதா னெங்ஙனே
அந்தமற் றவ்வெளியே யாம். (அஉ)

பந்தமுத்தி தானென்னை பாவனையா லொத்துண்ணல்
முந்துபந்த மில்லாமை முன்னுங்கா—லிந்தவகை
காணி லுணர்வொளியே காண விடத்தவையே
காணிவிரண் டும்பொய்யே காண். (அ௩)

இருவகையும் பொய்யென்னி னேதோதா னுண்மை
யொருவகையு மாகா தொளிர்வை—சரியாகு
முற்றுணர்ந் தோர்க்கென்னின் முற்றுணரா ருண்டேகாண்
அற்றதுநீ யாங்கே யறை. (அச)

எவ்வுயிரு மவ்வொளியே யின்பந்தான் சத்தியமே
அவ்வுயிரி லவ்வொளிகண் டாங்கிருப்பர்—இவ்வகைவிட்
டெவ்வுருவு மாயலைவ ரெவ்வெவரு மவ்வொளிதான்
அவ்வகையு மாங்கே யறும். (அரு)

எல்லாரு மவ்வொளியே யின்பந்தான் வேருமோ
எல்லாரு மின்பமே யீங்குணரார்—நல்லோர்
அறிந்ததுவாய் நிற்ப ரகலாரெஞ் ஞான்றும்
பிறிந்துலகைப் பேசார் பிறர்க்கு. (அசு)

அறிவைவிட் டின்ப மடையப் படாதேல்
அறிவின்ப மாக வமையும்—பிறிவின்றி
இத்திறந்தா னெச்சமயத் தென்றுமிலை யுண்டாயிற்
பித்தர்போற் பேசார் பிறழ்ந்து. (அஎ)

சிற்றறிவும் பேரறிவுஞ் செல்லளவு நீங்காவே
சிற்றின்பம் பேரின்பஞ் சிந்திக்கி—னிற்றதெனக்
கண்டிலையோ வின்பமிலை காணி னறிவளவே
விண்டாருக் குண்டாகும் வீடு. (அஅ)

ஆசைக் களவின் றகிலமுழு தாளினுமிங்
காசைக் களவுண் டறிவானின்—ஆசைக்
கறிவே சுகசாந்தி யாங்காங்கு காணின்
அறிவா நிறைவே யது. (அகூ)

ஏதுக் குறக்கந்தா னேதுக்குச் சாதனங்க
ளேதுக்குச் சும்மா விருக்கையெனி—னேதுஞ்
சுகமடைவா னவ்வெளியிற் சொல்லினது வொக்கும்
அகமமதை யங்கே யறும். (கூ0)

ஆனந்த மேபிரம மாமறிவு கூடத்தன்
ஆனந்தப் பேறறியா ராங்குளைப்பர்—ஆனந்தம்
அவ்வறிவுக் கன்னியமே லத்துவிதத் துக்கானி
எவ்விதத்தா லுய்வா ரிவர். (கூக)

தானறிவா னந்தமொழி யாகுந் தற்காணா
தானறிவென் பார்சொல்லார் தற்கண்டார்—தானாகுஞ்
சங்கற்ப சாலச் சகத்தோற் றரவறிவென்
றிங்கற்பங் காணா ரிவர். (கஉ)

உணர்வெளியின் வேறே லுலகந்தா னின்ப
முணர்வெளியின் வேறென் றுரைப்பம்—உணர்வெளியைக்
காணாத நிச்சயத்தார் கண்டாரைப் போலுரைப்பர்
காணாமை யால்வேறே காண் (கங)

கண்மூடி கட்குதவுங் கட்டொளித்த வந்நிலைதான்
கண்மூடா வாரூடர் கண்ணெங்கு—நண்ணுதலால்
இப்படிதான் சொல்லாரே யேகபரி பூரணமா
யப்படிதா னங்கே யமைந்து. (கச)

ஆனந்தா தீதத்தி லவ்விரண்டுங் கண்டிலமேல்
ஆனந்தா தீதந்தா னவ்வொளியே—யீனந்
தருகின்ற தத்துவமுந் தானுமொளி யாமேல்
வருகின்ற துண்டோ வலிந்து. (கரு)

அவ்வொளிவிட் டின்பமிலை யவ்வின்புக் கன்னியமன்
றவ்வதீ தந்தானு மாயுங்கா—லிவ்வாறே
மீண்டுமொளி தானாகு மெல்லமெல்லப் போமிவையுந்
தாண்டுமெயக் கத்தவர்க்கே தான். (கசு)

எப்பொருளு மெவ்விடமு மெக்கால முஞ்சிறைந்தே
எப்போதுந் தானு யிலகுமே—அப்பொருளை
நீரலையிற் சித்தனந்த நிச்சயிப்ப ரச்சுகமு
நீர்வெள்ளத் தாற்றிற்கு நேர். (கஎ)

சிற்சோதி தானாகுஞ் சிற்சோதி யாமறிவு
சிற்சோதி யானந்தஞ் சிந்திக்கின்—அற்புதமாம்
இந்திரியஞ் சிற்சோதி யேகவெளி யாமளவும்
எந்தவிதத் தாற்போ மிவை. (கஅ)

குடவெளியு மா[illegible] வொன்றே
குடவெளிநோக் காலொன்றே கூடா—குடநோக்காற்
கூறிரண்டு போலுடம்பாற் கூறுசெயிற் கூறுமோ
ஈறில் சுயஞ்சோதி யின்று. (௯௯)

சிவப்புச் சுடுகையொளி செஞ்சுடரா மென்னிற்
றவச்சச்சி தானந்தந் தானு—மவத்திற்றான்
பேதிப்ப தென்கொண்டோ பேருலகப் பேதத்தைச்
சேதிக்க வன்றே தெளிந்து. (௧௦௦)

ஆனந்த மேபிரம மாமென்னிற் சூனியமோ
ஆனந்தந் தானே யறியுமெனி—னானந்தஞ்
சிற்சொரூப மாகாதோ சிற்சொரூப மாமென்னிற்
கற்பிப்ப தேனோ கனா. (௧௦௧)

கற்பிப்ப தின்றாயிற் காணோமே சீவரிடத்
தற்பமுந்தா னின்பமெனி லாராய்ந்து—தற்காணி
னில்லாமை தானுண்டோ வெங்குந்தா னாகாதோ
புல்லாதோ வெங்குந்தான் போந்து. (௧௦௨)

புல்லா தெனினுருவப் போதத்தா லெவ்வுருவும்
புல்லா திருக்கினன்றே புல்லாது—புல்லுமெனிற்
சிற்சொரூப போதத்தாற் சிற்சொரூப மேயெல்லாந்
தற்சொரூப மாகாதோ தான். (௧௦௩)

எவ்வுருவுந் தானுமே லெவ்வுயிருந் தானாகும்
அவ்வுருவிற் றன்னுருவ மாயுங்கால்—வெவ்வேறா
மண்ணுருவா லொன்றேனும் வாதிப்பே னில்லையெனின்
ண்ணிலில தாமோ நவில். (௧௦௪)

தன்னுருப்போ லெவ்வுருவுந் தானாகுஞ் சந்ததமுந்
தன்னுருப்போற் பாவிக்கிற் சத்தியமே—தன்னுருவுஞ்
சின்னாள் பழக்கம்போற் சீவன் செகத்தாகும்
பன்னாள் பழக்கத்தாற் பார். (௧௦௫)

இதுபோலுஞ் சிற்சொரூப மெவ்வுயிருந் தானேல்
அதுபோலு மொன்றென்ப தாகும்—இதுகாறுஞ்
சொல்லுண்மை ஞானத்தாற் சோதிக்கி னென்றேதான்
இல்லாகு மைய மினி. (௧0௬)

சச்சிதா னந்தமுயிர் சச்சிதா னந்தமிறை
சச்சிதா னந்தமே தானுலகும்—அச்சு
தனையெங்குங் காணாது தன்னுடம்பிற் காண்பார்
பினமிவோ ரன்றோ பிறழ்ந்து. (௧0௭)

இக்குணந்தா னொத்திலையே யிவ்வுயிர்கட் கென்பையேல்
அக்குணந்தா னென்னையென வான்மாவை—யெக்காலுங்
கண்டார்க்கு முக்குணமுங் கண்டுங்கா ணார்க்கிரண்டும்
விண்டார்க்கொன் றன்றோ விளம்பு. (௧0அ)

இக்குணத்தைக் கற்பிதத்தி லேற்று முயிர்தம்முண்
மக்கள்சுரர்க் கிம்மூன்று மாபறவை—பக்குவமா
யூருமவற் றிற்கிரண்டே யொன்றாகு நிற்பவற்றிற்
கோரினிவை யன்றியுண்டோ வோது. (௧0௯)

உபாதி மயக்கத்தா லுற்றுணரா நோக்காற்
சுபாவ நிலையிழப்பாற் றேன்று—சுபாவகுண
மெப்போது மொத்திருக்கு மெவ்வுயிருஞ் சத்தியமே
தப்பாமே நம்பார்வை தான். (௧௧0)

நம்பார்வை தப்பென்னை நாடி னதனியல்பேல்
நம்பார்வை தேகிபா னுடாமை—தம்பமதாந்
தேகந்தா னென்னிலது தேகிகுணங் காட்டாதோ
ஏகதே சத்தாலென் றெண். (௧௧௧)

சிற்சோதி காணளவுஞ் செல்லாதிப் பேதமெனிற்
சிற்சோதி கண்டார்க்குஞ் செல்லாதென்—சிற்சோதி
எவ்விடத்துங் கண்டாருக் கெங்கேதா னெப்பேதம்
எவ்வாறு தோற்றுமோ வில் (௧௧௨)

கற்பனைக ளற்றவொளி காரணமு மற்றவொளி
யற்புதமாய் நின்றவொளி யாயுங்காற்—சிற்சொரூப
நானு விளங்குமொளி நாதங் கடந்தவொளி
தானேதா னுகுமொளி தான். (கக௩)

எப்போதுங் காணுதா ரிவ்வொளியைக் கண்டளவில்
எப்போதுங் காணுத வின்பத்திற்—றப்பாது
மூழ்கிக் கிடப்பரெனின் மூழ்கினு ரேன்விடயத்
தாழ்குவா ரந்தோ வறை. (ககச)

எங்குஞ் சுயஞ்சோதி யேகந்தா னுமளவும்
இங்கிப் படியாவ தென்னவோ—சங்கையொழி
யென்று ரவனு மினியசுக மெட்டென்பர்
நன்று.யதைநீ நவில். (கக௫)

விடயாதி யெட்டில் விடயசுகம் யாதேல்
தடையில் சுயஞ்சோதி தன்னை—யிடைநடுவே
பல்லுருவ மாக்கியின்பம் பாவித்த றுனென்பர்
தொல்லுருவ மானுர் துணிந்து. (ககசு)

விடையமொடு கேவலமு மேல்வா சனையு
மடைமுக் கியநிசமெய் யான்மா—கிடையாத
அத்துவிதம் வித்தையிவை யானந்த மெட்டென்பஞ்
சத்தசத்தைக் கட்டறுக்கத் தான். (ககஎ)

இச்சுகத்தைத் தற்சுகந்தா னென்றுற் பிழையென்னை
மெச்சுவிட யத்தவிப்பான் மெய்யாகா—பொய்ச்சுமெனிற்
கேவலா னந்தமோ கேடுந் தெரிவிழப்பாம்
ஆவலுருப் பெற்று லறி. (ககஅ)

வாசனு னந்தமோ வந்விவற் றிற்கிடையி
னேசமக லாதிருக்கை நீட்டியா—தாசமதாம்
வித்தா மூலகுக்கு வீணு மதுவன்றிச்
சித்தாமோ நீயே தெளி. (ககக)

முக்கியா னந்தமோ ரூழ்கா துலகத்தைக்
கக்கிய சோருக் கருதியே—யெக்காலு
நிர்ச்சிந்தை யாயிருத்த னீங்காமை யாலவித்தை
சிற்சொருபத் தாலன்று தேர். (கஉ0)

ஈடணையின் வாதனையா வில்லாமை யால்வெறுப்பால்
தூடணத்தி னுலிறப்பாற் றோன்றுமேற்—பாடணையா
தெக்கவலை தானறுதற் கேதுவென் போலியெனல்
எக்கருத்தாற் றற்சுகமா மன். (கஉக)

நிசானந்தந் தானே நிசமாகத் தன்னை
வசமாக் குறிகண்டு வாழ்த—னிசமாயின்
ஊசித் தொளையி லுயர்வானங் காண்பதொக்கும்
காசிக்கு மாகாது காண். (கஉஉ)

குறியிழக்கிற் காணு குறிகடந்த தன்னைத்
தறிபோ விருத்துஞ் சமாதி—பிறிதாகும்
இந்நிலைவிட் டாலென்னி னெவ்வாறு தற்சுகமா
முன்னிலைக்கு மேலா மொழி. (கஉ௩)

ஆத்துமா நந்தமோ வாயுங்காற் றற்பிரியம்
பேர்த்துவிட யத்தின்பாற் பேணுமே—நீத்து
வெறுக்கின் வெறுப்பாகும் வீயாத தன்னை
மறத்தலா லாமே மயல். (கஉ௪)

தன்னைவிட வேறுண்டேற் றனின்ப மாகாது
தன்னைப் புறங்காணிற் றன்வேறும்—தன்னைத்தா
னெவ்விடத்துங் கண்டக்கா லின்பந்தான் வேறில்லை
யிவ்விதத்தான் மெய்யா மிது. (கஉ௫)

தினக்குப் புறம்பற்றித் தானின்ப மாகுங்காற்
றனக்குப் புறம்வேறு தானு—நினைக்குங்கா
லெல்லாஞ் சுயஞ்சோதி யேகவெளி தானுகா
தில்லாகு மின்ப மிதின். (கஉ௬)

அத்துவிதா னந்தமோ வாக்கியப் பிரமமெனு
மித்துவித மில்லாமை யெண்ணுங்கா—லெத்துவித
மில்லாத சிற்சோதிக் கிங்கிலையுங் கற்பிதமே
இல்லாமோ வுண்டாயி னிங்கு. (கஉஎ)

பிண்டம்பின் டித்தபொருள் பேதம்போ லென்பர்சிலர்
அண்டம்பின் டங்களினு லாக்குவார்—கண்டித்து
நிற்கும் பொருளன்று நில்லாப் பொருளன்று
தற்பா வனையாலே தான். (கஉஅ)

வித்தியா னந்தமோ விஞ்ஞானத் தாமதுவுந்
தத்தொமசி வாக்கியத்தாற் முன்விளங்கும்—இத்திறத்தான்
ஆக்கையா லன்றியுயி ரார்தா னறிகிற்பார்
வாக்கியத்தா லன்றி வரா. (கஉகூ)

வாக்கியத்தா லன்றியிது வாரா தெனன்மெய்யே
வாக்கியமுஞ் சிந்தனையும் வந்தவிடம்—நோக்கி
னுணர்வெளியின் வேறன் றுணர்வெளியே யாமென்
றுணரினது கற்பிதமென் றோது. (கஙo)

படிக்கசிவை நீர்க்குளம்போற் பாவிக்கி னுமேற்
படிச்சா தனவின்பும் பார்க்கிற்—றிடப்பேறும்
என்று விதிலைய மெவ்விடத்துந் தற்கண்டால்
அன்றே யறுமென் றறி. (கஙக)

தன்னைமற வாதிருக்கிற் றன்னைமறை யாமயலுந்
தன்னையிழந் தாலொளியுந் தானிழக்கும்—என்னே
இதுதா னறியாதா ரென்கொண்டோ வாழ்வர்
மதியாதென் றோரார் மறந்து. (கஙஉ)

சிற்சோதி பேதங்கள் செல்லளவு நீக்காவே
சிற்பேத வானந்தஞ் சிந்திக்கிற்—கற்பனைக
ளில்லாமே நிச்சயத்தா லில்லாகுந் தற்சொரூபம்
கல்லாமை யாலே கனா. (கஙங)

தன்னிடத்தி லெவ்வுயிருந் தன்னையவற் றின்பாலும்
தன்னிடத்தி லெவ்வுலகுந் தான்காணின்—தன்னிலைதான்
எத்தனைதான் கற்றாலும் மெத்தவந்தான் செய்தாலுஞ்
சித்தங்கா ணார்க்குண்டோ செப்பு. (கரு௪)

கண்ணிலான் மாங்கனிக்குக் கைக்கோ லிழந்தாற்போ
லெண்ணமெலா மின்பொன்றுக் கெய்திழப்பர்—நண்ணுசுக
மெப்பொருளெங் கெவ்வண்ண மெந்நிலையென் றறியாதா
ரொப்படிதா னுய்வா ரிவர். (கருரு)

நான்கபா வத்தாலே நாடிப் புறங்காணேன்
நான்கபா வந்தானு நாடுங்கால்—வான்கமல
முன்பின் னிடையொன்று மூற்றுலக மில்லாமை
நன்கமைந்து நாடப் பெறின். (கருசு)

என்னையன்றி யொன்று மிருக்கப் பெறினன்றே
என்னையான் காணாமைக் கேதுவாம்—என்னே
அணுவேனு மென்னினைவுக் கன்னியமன் றாயின்
நணுகா தெனையன்றி நாடு. (கருஎ)

பரிச்சேத மூன்றும் பரஞ்சோதி காணின்
எரிப்பஞ்சு போலே யெரியும்—பரப்பி
அலங்கார மாத ரடியாருக் கெங்ஙன்
துலங்குமோ விந்நிலைதான் சொல். (கருஅ)

என்னையே பல் லுருவா யென்னிடத்தில்யான்பண்ணி
யென்னையான் மோகித்து மின்புற்று—மென்னை
விருப்புவெறுப் பாய்க்கண்டும் வீணெண்ணங் கொண்டும்
இருப்பதுதான் பொய்யோ விசை. (கருகு)

என்னைத் தவிரமற்றிங் கேதுமிலை யென்பையே
யுன்னையே யீசனென்ப தொக்குமே—தன்னைநிகர்
சிற்சோதி யாலொன்றே செய்கைகுணத் தாலிரண்டாம்
அற்பமிதி லையமிலை யால் (க௪0)

சிற்சொருப மொன்றுமற செய்கைக்குணம் வேறென்ன
சிற்சொருபக்கண்ணிழப்பாற் சேர்ந்தவெனிற்—சிற்சொருபம்
காணமை யார்குற்றங் காண ரிருவரொனிற்
காணமை யெங்கே கனா. (கசச)

செய்கைகுண பேதஞ் சிறிதுபெரி தாயிருக்கத்
தெய்வமென்று லென்னபயம் செப்பலா—மெய்வகையேல்
அல்லற் பிறப்பிறப்பிங் கார்க்கோ வுயிர்க்கென்னில்
அல்லவிறைக் கின்றே வறை. (கசஉ)

சமட்டி வியட்டிகளேன் சம்பந்தங் காட்டச்
சமட்டி வியட்டியினுல் சாரும்—சமட்டி
யுபாதியா லுன்ன லுறுமன்றி யுண்டோ
வுபாதியா தென்ப துரை. (கசங)

தூலாதி யென்பையேற் றெல்லுலக மாகுடலந்
தூலாதி யாகாவேற் றென்றுவே—தூலாதி
யுன்னையன்றி யுண்டே லுலகமவை யன்றியுண்டா
முன்னையிறை யென்றலென் னேது. (கசச)

ஐயா விதுமெய்யே யார்தா னறிகிற்பார்
மெய்யா முனையன்றி வேறில்லை—ஐயோ
அறிவை யறிவா யறிந்தவைவார்க் கெங்ஙன்
அறிவகண்ட மாகு மறை. (கசரு)

ஒருதொழிலு மில்லை யுடலன்றி யாயி
னொருமெய்யு மூழன்றி யுண்டோ—யொருவினையும்
இச்சையன்றி யில்லை யிதுவுமுணர் வன்றியே
இச்சிப்ப துண்டோ விசை. (கசசு)

உணர்வன்றி யில்லை யுயிராயி னீச
னுணர்வன்றி யென்று முளனே—வுணர்வதனைக்
காணி னிருவரிலை காணுரோ பேதிப்பர்
நாணந்தா னின்றே நவில். (கசஎ)

உத்தேச லட்சணத்[illegible]சையினால்
எத்திரிபு மையமுந்தா னின்றியே—சித்தநிலை
காணாத பேதத்தாற் கட்டுரைத்த நிச்சயந்தான்
வீணே விதியோ விளம்பு. (கசஅ)

உருவஞ் சிவமென்னி லொன்றுமுண ராதே
யருவஞ் சிவமென்னி னற்றே—யுருவருவம்
என்றாற் கனவொக்கு மெண்குணத்தா னென்னினோ
இன்றே யுறக்கத் திது. (கசக)

ஒளியென்னி னீச னுணர்வொன்று மில்லை
வெளியென்னிற் பாழன்றி வேறே—தெளிவின்றே
காலத்தா னென்னிலது காணா தொழிலென்னில்
ஏலா தறிய விது. (கரு0)

இருளென்னின் மூட மிடறைய மாமே
மருளென்னி னற்றே மடியும்—அருளென்னி
னொன்றுமறி யாதிருக்கு முண்டென்னி லின்றாகும்
ஒன்றென்னிற் றீதா நயந்து. (கருக)

தெய்வந்தா னின்றென்னிற் றேகாதி தாம்படையா
தெய்வந்தா னுண்டேற் றெரியாதோ—பொய்யென்னிற்
றன்னைத்தான் கண்டாற் றலைவன் வெளியாவான்
பின்னைத்தா னவனே பேசு. (கருஉ)

தேகந்தா னன்றுயிற் றேகாந்த முத்தியிலை
தேகந்தா னன்றியுண்டோ தேகிதான்—ஆகநிலை
மண்ணீ ரனல்கான் மயக்கத்த தாமறிவு
மண்ணாதி வேறே மதி. (கருங)

தேகபோ கத்தையன்றித் தேரிற் பதவியிலை
மோகந்தான் வேறுண்டோ மொய்குழலார்—ஆகந்
தனையன்றித் துன்பசுகம் தானரக சொர்க்கந்
தனையன்றி யெங்குண்டு தான். (கருச)

படசித் திரமென்னப் பாறயிர்போன் மண்ணின்
கடபேதம் போற்பிம்பக் காட்சி—கடனீர்
அலையாதி தோற்றம்போ லாணிழல்போற் கானற்
சலம்போலக் காணுஞ் சலம். (கருரு)

மண்ணாதி நான்கின் மயக்கத்த தாமுடலும்
நண்ணு நினைவன்றி நண்ணுமெனிற்—கண்ணுறக்கத்
தேனோ தெரியவில்லை யிச்சாஞா னக்கிரியை
யேனோ புரித லிலை. (கருசா)

பாதாதி கேசப் பரிசத் தெரிவின்றேல்
ஏதா லுடலிருப்பிங் கேதறியும்—நீதியாய்
அவ்வறிவி லேயுடலோ வவ்வுடலி லேயறிவோ
அவ்வறிவி லாய்ந்திங் கறை. (கருஎ)

தோன்மினுக்கோ வின்பந் தொலையாம லப்போர்வை
தோன்மறைப்பைத் தள்ளினிணத் தூர்க்கந்தம்—மேன்மிதப்
உண்டுசுக மென்பையே லோதிற் பயனில்லை [பால்
கண்டுங்கா ணுக்குருடோ காண். (கருஅ)

ஆகாய மான்மாவு மாயா திலையென்பை
போகாதி துய்ப்பதெது பூதமெனில்—நீகாண்
அறியாதே கூட்டரவி ஞமென்னிற் றூக்கத்
தறியாத தென்னோ வறை. (கருக)

எல்லாஞ் சுபாவந்தா னென்று லெதற்கேது
நல்லா யதற்கதுவே நண்ணுமெனிற்—புல்லறிவால்
ஏதேது சொன்னாலு மெல்லா மதுவென்பை
யேதேது மாகா திது. (கசா0)

சண்டிமாட் டைப்போலுஞ் சாதிப்பா லென்னபயன்
அண்டபிண் டப்பகுப்பை யாராயிற்—கண்டிலைகொல்
தோற்ற மொடுக்கந்தான் றெல்லறிவின் பாலதே
தேற்றந்தா னின்றோநீ செப்பு. (கசாக)

என்றால லறிவுதய[illegible]
பொன்றாத முக்குணமும் பொன்றுமெனி—னன்றேகாண்
நின்மலவான் மாவடைவ னித்தமுத்தி சாங்கியன்றான்
என்பா னிதற்கென் னிசை. (கசுஉ)

மண்காணிற் றோற்றமிலை மாவெளியிற் கண்டமிலை
கண்காணிற் காணுமோ காணுலகம்—எண்ணும்
நினைவு தனைக்காணி னினைப்புமறப் புண்டோ
அனைத்துந்தா னாமென் றறி. (கசுங)

குணரகித வான்மா குணசகித மாமோ
குணகா ரணங்காணார் கூற்றே—யுணரிற்
பரிச்சின்ன மாகா பரஞ்சோதி யான்மா
பரிச்சின்ன மாமோ பகர். (கசுச)

மூலப் பகுதிகெடின் மூடமா யாவாதி
சீலமுத்தி யென்பனது செப்புங்கான்—மூலமுத
லேதோ விருப்பிடந்தா னேதோ வுதித்தொடுங்க
லேதோ சுயஞ்சோதி யில். (கசுரு)

இருக்கினன்றோ போகு மிராததெங்கண் போகும்
இருக்குமோ நம்மையன்றி யேதும்—இருக்கிற்
றெரிவதனை நீக்கித் தெரிபொருளைக் காட்டிற்
சரியாநின் சாதனையே தான். (கசுசு)

ஆன்மா விருக்கி லழியாப் பவத்துன்பம்
ஆன்மா லயிக்கி லடையாதே—தான்கூறிற்
பார்க்குங்கண் காணிற் பகரானென் றாலெங்ஙன்
எற்கா தணுவோ விதி. (கசுஎ)

அனுமானத் தாலே யறிவேபோற் காணும்
அனுமானத் துண்டென்ப தாகும்—அனுமானம்
வத்துநிலை காட்டுமோ வாராதோ பேரின்பம்
இத்திறத்தா லென்னோ விசை. (கசுஅ)

இச்சாதி சத்தியன்[illegible]படையா
இச்சாதி சத்தியே யீங்குண்மை—நச்சோம்
பறதேவ வதையென்னும் புத்தியிலா வாமி
நறவூன் புணர்ச்சி நயந்து. (கசுகூ)

சத்தியே மெய்யென்னிற் சத்தி சடமாமே
சத்தியன்றி யின்றென்னிற் சாதனங்கள்—சத்தி
அறிவன்றி யுண்டோ வறிவு மதனுல்
அறியுமெனின் மெய்யோ வறை. (கஎ0)

சிவேச ராலுலுஞ் சிற்சத்தி யாவியங்குஞ்
சிவேச னென்பனவுஞ் சிற்சத்தி—சிவேசர்
பாசங் கடந்து பரஞ்சோதி யாமதுவு
நீசத்தி யென்றே நினை. (கஎக)

நால்வாக் கிடத்துநீ நாடுங்காற் சிற்சத்தி
நால்வாக்கை யன்றியுண்டோ நான்மறையும்—நால்வாக்
குபதேச மன்றோ வுயர்முத்தி யாமே
தபவே துவிலுலே தான். (கஎஉ)

சத்தியன்றி யுண்டோதான் சத்திபல வானுலுஞ்
சத்தித் தொடக்கறுக்கிற் றானுண்டோ—சத்தன்
தனித்துச் சுகமடைந்து தான்சும்மா நிற்பன்
இனித்தான் வழக்கே னிசை. (கஎங)

சயினமதந் தானே சகஞ்சத் தசத்தாம்
நயனத்தாற் பின்னபின்ன நாட்டி—அயனத்
தறியாக் குடும்ப மனுதியே யென்பன்
வெறியர்க்கு வேறோ விதி. (கஎச)

தேக விலட்சணனுய்த் தேக பராமிதனுய்த்
தேகபோ கத்தனுய்ச் செப்புங்காற்—றேகிதான்
யெப்பொருளிங் கெவ்வாறென் றெத்தொழிலெக் காலந்தான்
இப்படியென் றுய்ந்தா னிலே. (கஎரு)

ஆகாயங் கால மதன்முத்தி யாகமொடு
சாகா வுயிர்முத்தி தான்பந்தம்—ஏகாத
தன்முத்தி யாகமொடு சார்புண் ணியபாவம்
கன்மத்தா லாம்புட் கலம். (கஎசு)

என்னுமிவை பத்துந்தா னென்று மநாதியெனின்
என்னே துயிலுங்கா லில்லாமை—மன்னுமெனின்
காண்பா னிலையோ கருதலொழிந் தாலென்னிற்
காண்பா னினவோ கனா. (கஎஎ)

அன்னிய மென்று லறியாத தேன்சுழுத்தி
யுன்னியமென்று லிங்கு டோன்றும்—தன்னிலையாற்
காணுமை யாலென்னிற் காட்சிநினை வன்றியிலை
காணு நினையுலகே காண். (கஎஅ)

நினைவுலக மாயி னினைவழிந்தா லின்றே
நினைவுளார்க் கன்றே நிகழும்—நினைவுக்
குபாதியிடங் காணி ருளறத் திடமுண்
டபாயந்தா னெங்கே யறும். (கஎகூ)

தார்க்கிக னேவென்னிற் முன்சோட சப்பொருளால்
யார்க்கா யினுஞ்சளையா னெங்கேனும்—பார்க்கிற்
பரமாணு சங்கத்தாற் பாராதி யாகும்
பரமாணு மானந்தான் பார். (கஅ0)

பிரமாண சஞ்சயமும் பேசுபிர மேயம்
பிரயோச னத்தோடு பேணும்—நிருணயமுஞ்
சித்தாந்த திட்டாந்த சிர்ச்சல்ப நிக்கிரகம்
எத்துவா பாச்ச வினி. (கஅக)

சாதிவி தண்டையொடு தான மவயவமும்
வாதம்வை தர்க்கமிவை வாதிக்கின்—பேதமாய்
எச்சமயத் தோர்சொல்லு மெவ்வகைவா தப்பிணக்கும்
அச்சமயத் தாங்கே யறும். (கஅஉ)

ஆன்மா பலவா யறிவுமை [illegible]
ருன்மாவை நிச்சயத்தா லாங்கறைவன்—ஆன்மா
வுடலளவோ வன்றே லுணராத தேன்மற்
றுடல்போகப் பேறிங் குரை. (கஅங)

அப்போகங் காணி லவர்செய் வினையறவே
அப்போதப் போதெடுத்த வவ்வுடலா—லப்போ
தபிமானத் தாலன்றோ வான்மா பலவாம்
அபிமான மில்லா ரறை. (கஅச)

நன்றுநின் சங்கைதனை நாடிவிவை தாமெங்கே
நன்றாய் நிகழ்வதுநீ காட்டமுறின்—அன்றே
யுடல்போக கன்ம முறுதியபி மானம்
இடங்காணு தோடு மிவை. (கஅரு)

நினைப்புமறப் பில்லா நிலையுயிர்கள் காணேம்
நினைப்புமறப் பெங்கே நிகழும்—அனைத்திடந்தான்
ஒன்றேயன் றென்னி லுணராத வன்போலும்
நன்றாய்க்கண் டாங்கே நவில். (கஅசு)

கண்டபொருள் யாதுங் கருதநினைப் பென்பையேல்
கண்டவ ரார்போயுங் காணுயே—துண்டமனப்
போக்கென்னின் வேறேநீ போகுங்காற் கண்டாயோ
தாக்குவிட யஞ்சடமே தான். (கஅஎ)

அறிபொருளை யன்றி யறிவதனைக் காணுய்
அறிபொருளு மின்ன தறியாய்—அறிந்தபொருள்
போலிவடி வென்னினோ போலிவடி வாயதெது
சாலப் படித்துணர்ந்திர் சற்று. (கஅஅ)

பிரதிபிம்பந் தானுண்டோ பிம்ப மறையிற்
பிரதிபிம்பங் காணுமெனிற் பின்னும்—உரனின்றே
கல்லாரு மேலாரோ கற்றுணர்ந்த மேலோரை
ல்லா யுடைந்துய்ய நாடு. (கஅக)

அடுத்தமய மாகுமே யான்மாவென் றேதின்
அடுத்தபொரு ளாயெங் கமைவ—னெடுத்த
உடலளவா நின்றென்னி லுன்னி லுணர்வாய்
உடலளவா கானென் றுணர். (௧௧0)

உன்னலள வாயென்னி னுன்னுச் சுழுத்தியுறல்
உன்னுத சூனியமென் றேதிலோ—இன்ன
திருவகையு மல்லார்க் கிலகுவன்கா ணென்ன
வொருவனல னுமன் றுணர். (௧௧௧)

என்று லஃதெங்ங னேகவான் மாவாகில்
ஒன்றுயெல் லார்க்கிலகு மொத்திலையே—நன்றே
யறிவன்றி வேறு யறிவர்தா மென்ன
அறியாத தென்னோ வறை. (௧௧௨)

அறிந்தா ரறிவை யறியாதார் வேறே
அறிவா விருவ ரனையர்—பிறிதாகார்
தன்னையறி யாதானைத் தான்வேறு யேயறித
லின்னதொழி லால்வே றிவர். (௧௧௩)

அனைத்துயிரு மொன்றே யறிவா தலினால்
அனைத்தறிவு காணி னகலும்—அனைத்தென்னும்
பேதந்தா னக்கணமே பேணிற் பெரியோரை
வாதத்தா லாமோ வழி. (௧௧௪)

வேதாந்தந் தானே விதிக்கு முபநிடதம்
வேதாந்த மாறுய் விரியுமே—நாதாந்தம்
வத்துதா னேபலவாய் வாய்த்த தெனமயங்கல்
எத்துசமு சாரமென வெண். (௧௧௫)

வாக்கியஞா னத்தால் வருநாச பாசமுத்தி
யாக்குமெனும் பாற்கரிய மாராயின்—தாக்கற்ற
சின்மாத் திரந்தானே சீவேச ராய்மயங்கல்
அன்பாஞ்சம் சாரமென லாம். (௧௧௬)

ஞானோ தயத்தாலே நாசமய்க் காமுத்தி
தானே யறுமென்று சாற்றுமால்—ஈனமிலா
மாயாவா தந்தானு மாப்பிரம மேயுலகா
யாயாமை பந்த மது. (ககூஎ)

கன்மஞா னத்தாற் கழிதல்பந்த முத்தியெனும்
தன்யாத வப்பிரகா சன்றானும்—தன்மயமாம்
அப்பிரமந் தானே யனைத்துலகுக் காதியெனச்
செப்புயோ காயனமுந் தேர். (ககூஅ)

தற்சொருப மேமேவுந் தன்னின்ப மேலில்லை
வற்புறுத் துங்கிரீட வாதமுடன்—அற்புதமா
நாதாந்த மேபிரம நாடுசத்த வாதமிவை
வேதாந்த மென்றார் வியந்து. (ககூகூ)

ஞானோ தயத்தி னவநவமாத் தோற்றுமது
தானே சுயம்புநிலை தானாகும்—ஏனோகாண்
முடிவுறவு தாளாண்மை முன்காணு வின்பக்
கடல்கண் டதனாலே காண். (உ00)

சிற்றறிவு சாட்சி சினைதயா திருக்குமெனின்
முற்றிவு மற்றே முடிவின்கண்—னற்றகுறி
யெல்லாஞ் சுயஞ்சோதி யேகவடி வாநம்மை
யல்லாது காணோ மது. (உ0க)

பசுபதி பாசப் பகுப்பை யனாதி
நிசமென்று நித்த நினைவில்—வசமாகக்
கொண்டுசா திக்கவல்ல கூறுகெட்ட சித்தாந்தம்
அண்டப் புரட்டென் றறி. (உ0உ)

பூத பவுதிகமே பூரணமா முட்டிறம்பி
லேது மறியா ரிவையன்றி—வாதிடுவார்
பாவனையோ சிவேசர் பாவனைதா னேதறிவார்
பாவனு தீதமெனிற் பார்த்து: (உ0ங)

எதுதானோ சிவ னெதுதானோ வீசன்
எதுதான் சகமென்று மெண்ணாய்—மதிதன்னால்
வேடங் குணஞ்செய்கை வேறுச மிவையென்னிற்
பாடந்தா னன்றோ பகர். (உ0ச)

சடமா தலினாலே சாதிக்க லாமோ
சடமன்று வேறென்னிற் சாற்றாய்—மடமன்
றறிவே சிதாபாச னானந்த மீசன்
பிறிதாகா தொன்றும் பிறழ்ந்து. (உ0ரு)

அறிவென்று மானந்த மாகாது தன்னை
அறியிலா னந்தத்தி லாழும்—பிறிதாகும்
ஆறாறு தத்துவமு மாணவமு மக்கணமே
தேறா வதுவீடு தேர். (உ0சு)

என்றா லஃதுண்மை யெம்மனோ ருக்கேற்கும்
பொன்றாத தத்துவமும் போனவிடம்—நன்றாகும்
உன்னையன்றி வேறுண்டோ வுண்டே லஃதெங்ஙன்
தன்னை யறியாச் சடம். (உ0எ)

ஓதிலெதி லாயவ்வை யுண்டில்லை யென்பதெங்ஙன்
பேதிக்கு மாயையே பேணுமிடம்—ஆதி
எனிலுண்மை யம்மாயை யேதோ விடமே
தனில்வேறோ காணா யுனில். (உ0அ)

இருள்போலு மென்னி லிரவியன்றி யுண்டோ
இருள்பூமி சாயையெனி லெங்ஙன்—இருளுந்தான்
சூரியனில் வேறாமோ சூரியன்முன் னில்லையெனிற்
சூரியனே கண்ணாகிற் சொல். (உ0க)

கண்ணிரவி யாகிலிலே காணுமிரு ளென்பையேல்
கண்ணறிவு தானாகிற் காணுமோ—நண்ணுமயல்
சோதிதா னாமளவுஞ் சோதிக்கி லுண்டென்னிற்
சோதியே மாயையெனச் சொல். (உக0)

எப்படியான் சொல்வனெனி லெப்பொருடான் போயதெங்
அப்போ துளதாகு மன்னியமே—லெப்போதும் [ஙன்
அவ்வறிவு கண்ணே லணுகா தஃதென்றும்
அவ்வறிவே மாயை யறி. (உ.கக)

அறிவுக்கு வேருகு மானந்த மென்னில்
அறிவின் வரைய தறையிற்—பிறிதென்போம்
எல்லையிலா தெங்கு மிலகு மறிவென்னில்
எல்லையிலா வின்ப மெது. (உகஉ)

சச்சிதா னந்தநித்தந் தானகண்ட மாமறிவேல்
அச்செல்லாம் வேறே வறிவுக்கு—சிச்சி
அறிவிலக்க ணத்தை யாயாத பேதாய்
அறிவன்றி யுண்டோ வறை. (உகங)

அசத்தாதி லட்சணத்தா லானதிது மாருய்
அசத்தாதி போன்முடிவி லாகு—நிசத்தில்
விடாப்பார்வை யாலே விளங்குமா லுண்மை
விடாப்பார்வை யாலே விதி. (உகச)

அறிவுக்கு வேறென்னி லானந்த மூடம்
அறிவே யதுவென்னி லாங்கே—பிறிதுண்டோ
கண்டா ரிலையென்னிற் காணுத போதுண்டோ
கண்டாலப் போதுமிலை காண். (உகரு)

சிற்சோதி யன்றியிலை சீவேச ராமயக்கம்
சிற்சோதி காண்போர்க்குத் தீருமே—சிற்சோதி
தன்னையன்றி யில்லையே தானே சகமாதி
தன்னையறி யார்க்குண்டோ தான். (உகசு)

விசிட்டாத் துவிதந்தான் விட்டுணுவே தெய்வம்
பசுப்பகுதி யுய்யும்வகை பார்ப்பான்—நிசத்தென்றும்
துன்னயச்சீர் வைகுந்தந் துன்ன வளிக்காரோ
தன்னடியார் தாம்பெறவே தான். (உகஎ)

என்னு மஃதுடையா னென்று மடியேன்
தன்னுடம்புந் தன்னுயிரும் தானறியான்—முன்னவனைப்
பாவனையாற் பூசித்துப் பல்லாண் டவனடிக்கீழ்ச்
சாவதனைத் தீர்ந்திருப்பேன் றான். (உகஅ)

என்பா னவனென்னி னெவ்வாறு தானுய்வான்
தன்பா வனையின்ன தானறியான்—தன்னைத்
தடியாகக் கொண்டுடையான் தானுந் தடியாய்ப்
படிமீது பூசிப்பான் பார். (உகக)

அய்யய்யோ வென்னமதி யார்காணப் பூசிப்பான்
மெய்யா முடலன்றி வேறறியான்—பொய்யாம்
உறக்கத் திவையறியா னுண்டுறங்கத் தானறிவன்
திறக்கத்தா னுண்டோவாய் செப்பு. (உஉ0)

வேடங் குணஞ்செய்கை விட்டுணுவோ வல்லவே
மூடன்றான் கொள்வனோ முற்றுணர்ந்தோய்—நாடில்
அசத்தா இல்க்கணத்தா லாகாதே தெய்வம்
அசத்தாதி யன்றே யறை. (உஉக)

பரமான்மா சீவான்மா பாராதே கூறிற்
றிரமாஞ் சொரூபந் தெரியாய்—வரிசைகெட்ட
வாயே னுனக்கென்னில் வல்லோர்நூ லாலென்னின்
ஞாயமிலா துண்டோ நவில். (உஉஉ)

ஞாயமிலா தில்லை நவிலவறியே மென்னின்
ஞாயத்தாற் றேற்றவல்லார் நாடாதென்—காயக்
கொழுப்பாலோ மூட குணத்தாலோ செல்வச்
செழிப்பாலோ கேளாய் செவி. (உஉ௩)

தேகாந்த சூக்குமத்தாற் றெண்ணீர் நதிகடந்து
போகாந்த கேவலமும் போயகன்று—ஏகாந்த
சத்தியவை குந்தனடிச் சார்ந்திருக்கும் பாகவதர்
நித்தியப் பேருற்றார்க ளோர். (உஉ௪)

சத்தமனு மானத்தா[illegible]லன்
சத்தாதி லட்சணமுஞ் சாற்றவலீர்—சத்தாதி
கொள்ளும் பொருள்காணீர் கோனையறி வாலுணர்வீர்
வெள்ளைநா மத்தால் வியந்து. (உஉரு)

தூலநீ யன்றேற் றெழுவானீ யார்காணாய்
மாலுருவ மோவழியு மானதமோ—போலி
வடிவாகின் னாலே வினைபொருளன் றேகும்
மடமன்றோ பாழென்னின் மால். (உஉசு)

அறியப் படாதென்னி லாரா லறியான்
அறிகின்ற நம்மா லறையில்—வெறியாகேள்
நாமா ருடலென்னி னல்லுறக்கத் தெங்கேதான்
நாமேதப் போதென்னி னாடு. (உஉஎ)

சூனியத்தைக் கண்டு சுகமுற் றெழுந்திருப்பை
எனில்லை யப்போது மென்னாதே—நானங்
கிருந்துமறி யேனென்னி னெப்படிநா னென்பை
பெருந்திண்டிப் பேயேநீ பேசு. (உஉஅ)

சாக்கிரத்துஞ் சொப்பனத்துந் தண்டாச் சுழுத்தியினும்
போக்குவர வற்றிருந்து போந்தபொருள்—சாக்கியதாய்க்
கண்டு சுகித்திருப்பன் காணேனு னென்னையெனில்
அண்டர்கோ னுக்கடியா னூர். (உஉகூ)

ஆராயி னென்னை யறியப் படாவிபுவாந்
தேதோனு னின்னதெனச் செப்புதற்கு—பாராதே
யென்று விதமெய்யே யெங்கேயாண் டானடிமை
யன்றோ பிதற்றென் றறி. (உ௩0)

அறிவான்மா வாகி லனாதி யுலகம்
அறிவுக்கு வேறோ வறையில்—அறிவும்
உடலளவோ வன்றே லுலகளவோ வன்றேல்
மடமையுற வோவன்றேன் மற்று. (உ௩க)

எவ்வளவு தானோ [illegible]றல்
இவ்வுலக மெங்கே யிதிலென்னில்—இவ்வகைதான்
எப்போது மன்றோ வெனைக்கண்ட போதென்னின்
அப்போ துலகெங் கறை. (௨௯௨)

அப்போது போயதெனி லன்றியுனை யுண்டிடமோ
எப்படியான் சொல்வனெனி லென்னபொருள்—அப்பொருடான்
ஆயதெனி னாலறியே னானாலுனக் கென்வாய்
நீயதுவே நன்றென்ன நேர். (௨௯௩)

நாதமுனி யோடிந்த ஞானந்தான் போயதென்று
பேத வாதத்தாலே பேதிப்பை—பேதாய்
வினைமுதனான் மெய்யோ விவர்த்தமோ சொல்லோ
அனையதுதா னேதென் றறி. (௨௯௪)

மகமதிய மார்க்கமெனின் மாண்டாரைப் பூசித்
தகமமதை யென்று மன்றோ—மகமதியன்
ஆண்டான் குருதெய்வ மாமென்னிற் றாலமோ
மாண்டாற் பிணமா மதி. (௨௯௫)

பிணமென்று சொல்லாதே பேசி லழிவை
நணுகாதே முத்தியெனி னன்றே—பிணமன்றி
மண்ணோவன் றென்னின் மதிமயக்கோ தொல்வழக்கோ
எண்ணாத தென்னோ விசை. (௨௯௬)

பெரிதா மகிமைப் பெரியோனென் றோதிற்
புரிவா னுடலோ புரியா—தொருதொழிலுஞ்
செய்தா னிருந்ததெனிற் செல்விடமெல் லாமவனோ
செய்வானாய்ப் பாவிக்கிற் செப்பு. (௨௯௭)

என்றாவிவ் வாறே யியம்புஞ் சமயங்கள்
பொன்றாத சித்துடலைப் போலுமே—அன்றே
வெளியாகு மென்னில் வெளியுஞ் சடமாம்
வெளிக்கிடந்தா னுண்டோ விதி. (௨௯௮)

பிராணன்ரு னென்னிற் பெரும்பாலு முடம்
பிராணன்தா னின்றேற் பிணமாம்—பிராணன்
இருக்கி லெவையு மியற்றுமே யென்னின்
இருக்குந் துயிலெங் கிசை. (உ௩௯)

ஓய்வென்னி லுண்டே யுலக மறிவென்ரு
ஆய்வதுவு மின்றே லதுவாமோ—வாய்வி
னமிசந்தா னன்ரு வறியாயோ பேதாய்
துமிலப்போர் செய்வாய் துணிந்து. (உ௪௦)

அல்லாவே தெய்வ மறிவாயோ சொல்லன்றி
எல்லாம்வல் லோனென்னி லென்னபொருள்—சொல்லாற்
குணங்குறிக ளற்றதெனிற் கூடாப் படைப்பு
குணங்குறிக ளுள்ளதெனிற் கூறு. (உ௪௧)

உபாதியிடம் வேண்டு முளவாகு மென்னின்
அபாயசுக துக்கத் தலைவன்—சுபாவத்தால்
இல்லா னவையென்னி லெவ்வா றுலகளிப்பன்
எல்லா நினைக்கி லெனின். (உ௪௨)

நினைக்கின் மறப்புண்டே நீக்கியிருப் பானேல்
அனைத்துலகை யாக்க வறியான்—தினைத்துணையும்
ஆகாதே யென்னி லறையப் புகுவானேன்
நாகாக்கி னுண்டோ நவில். (உ௪௩)

கொருன்சொல்லு மென்னிற் கொளுமேது வின்றே
கொருனீசன் சொல்லென்னிற் கொள்ளோம்—அருத
வழக்கறுப்ப தின்றேல் வழிபடுவார்க் கென்றுஞ்
சழக்கறுப்ப தெங்ஙனே தான். (உ௪௪)

செத்தாரை யெல்லாம் செகமுடிவிற் ருனெழுப்பிக்
கத்தாவும் வந்து கதியளிப்பன்—பித்தறிவாற்
கண்டபடி சொன்னூற் கடையன்ருன் கொள்வனே
வுண்டோ வறிவிங் குரை. (உ௪௫)

பிணக்குழியி னுள்ளே பிறிந்தவுயிர் தங்கி
மணக்கத்தான் கண்டையோ மாடே—பிணக்கதையை
மெய்யென்று ஞாயம் விதிக்கப் படாநூல்கள்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய். (௨௪௬)

கிறிஸ்துமதந் தானோ கிறிஸ்துவே தெய்வம்
கிறிஸ்துவே மத்தியஸ்தன் கிட்டிற்—கிறிஸ்து
அனைவர்பா வத்துக் களித்தா னுயிரை
அனைவர்க்கு மாசா னறி. (௨௪௭)

பிதாசுதனோ டாவி பிரிவாக்கி மூன்றும்
பிதாவுக்கு வேறன்று பின்னும்—நிதானிக்கில்
ஆக்கி யழிப்பா னனுக்கிரத் தாலகத்தைப்
போக்குமத னாலென்பாய் போந்து. (௨௪௮)

ஆறுநா ளைக்குள்ளே யாக்கியுல கேழிற்றான்
ஆறுதலுற் றானென்பை யானாற்கேள்—தேறில்
அவனெங் கிருந்தளித்தா னாகாதேற் சொல்ல
அவமாமே நின்சொல் லறை. (௨௪௯)

வேதந்தான் சொல்லுமெனின் வேதந்தான் மூடமோ
நாதன்சொல் லேயென்னி னன்றேகா—ணேதுக்
குதவான்சொல் லன்றிங் கொழிக்குமே சங்கை
பதயளிக்கத் தக்கதோ பார். (௨௫௦)

எட்டாத தாமென்னி னெட்டாத தோவவற்றிற்
கெட்டாத மூடன்சொல் லென்னாதென்—துட்டா
வருநாணத் தாலோ வழக்காமென் றாலிங்
கிருப்பா யவரிட்ட மென்று. (௨௫௧)

தேகாதி தாமறியா சீவனறி வானென்னில்
ஆகாதோ சீவ னறிவென்னிற்—சாகாத
சித்தன்றிக் காண்போர்க்குச் சீவாதி மூன்றுண்டு
சித்தறிவார்க் குண்டோ செகம். (௨௫௨)

அறிவன்றி யுண்டா மனுதியுல கென்னின்
அறிவன்றி யாண்டானுண் டாவன்—அறிவன்றி
இல்லையுல கென்னி னிறையு மிலனுவன்
இல்லையறி வேவிரண்டு மில். (௨௫௩)

அறிவிலே காணு மனைத்தென்னி னுங்கவ்
வறிவதனைக் காணி னனைத்தும்—அறிவன்றி
யுண்டோநீ காணு யுனையன்றி யொன்றில்லை
யுண்டாகுங் காணு துறின். (௨௫௪)

எங்கு மிறையென்னி லெவையு மிறையாமே
தங்குபர லோகமெனிற் சாருமே—யங்கமதாய்
ஆகா னுருவென்னி னுஞ்சு னியனென்போம்
ஆகானேற் பின்னே தறை. (௨௫௫)

சர்வஞா னத்தனியன் சர்வே சுரன்கத்தன்
சர்வவல்ல னென்னினே சாற்றக்கேள்—சர்வகுணம்
எற்கும் பொருளென்னை யேலா துணர்த்தவெனின்
எற்கா ரெவரு மிது. (௨௫௬)

ஏனென்னிற் சிவர்க் கியையாமை யார்சொல்வ
தேனின்பம் போலென் றியம்பறியாய்—ஈனு
முதலுக்கோ செய்கைகுண முன்னமிவற் றிற்கோ
முதலுக்கேற் செப்பாய் முதல். (௨௫௭)

வாசாம கோசரனேல் வாழுமிட மேன்சொன்னுய்
நேசர்க்காச் சொன்னதெனி னீகெடுவை—வாசம்
அறியாகின் பேச்சை யறிவாரு மற்றேல்
அறியான் வழிகாட்ட லாம். (௨௫௮)

ஆதித்தாய் பாவ மனைவர்க்கு முண்டென்றுந்
நீதில் கிறிஸ்தவினுற் றீர்வென்றும்—ஓதில்
ஒருவன் பசிதாக மோயாப்போ கம்பி
னொருவர்க்கெங் குண்டாகு மோது. (௨௫௯)

அவர்சந் ததியா மனைவருட லில்லை
அவர்தி வினையணுகு மாயின்—எவரும்
உடற்ருனே வேரு வுடலெண்ணிற் கூடோ
உடலாகும் புள்ளுக் குறை. (உ௬0)

உடலன் றுயிரொன்னி ஞெட்டா துடலுக்
குடலோடு செய்வதனு லோதின்—மடமன்றே
கத்தியால் வெட்டினனேற் கத்திக்குப் பாவமோ
கத்தனுக்குப் பாவமோ காண். (உ௬க)

கத்தியன்றி வெட்டானே கத்திக்கும் பாவமெனிற்
கத்தி சடமென்று கண்டிலேகொல்—கத்தி
புரிவானுக் கென்னிற் புனிதனிறை யன்ருே
தெரியினுயிர்க் காமென்னிற் செப்பு. (உ௬உ)

எதைநீ யுயிரொன்பை யிவ்வுடல்பா னின்றிங்
கெதையு மறிவா னெவனே—அதையெண்ணின்
எப்பொருடான் கண்டிலேகொ லிம்மூச்சுத் தானென்னிற்
றப்பாது காற்ருே சடம். (உ௬௩)

சுவாசந்தா னின்றேற் சுகதுக்கங் காணேஞ்
சுவாசந்தான் சீவனெனச் சொல்லிற்—சுவாசந்தான்
மூச்சை மரணத்தின் மூடச்சு மூத்தியினுந்
தேர்ச்சியிலா தென்னேநீ செப்பு. (உ௬ச)

எட்டப் படாதென்னி லெட்டாத தேன்சொன்னுய்
இட்டவனு மானத்தா லென்றறையிற்—றுட்டாகேள்
வந்திமகன் பாவியென வாயா லறைவதொக்கும்
எந்தனுா யத்தானு மில். (உ௬ரு)

கண்கண்டான் போலுனைத்துக் கண்டாரை யொன்ருக்கிக்
கண்கெட்டான் போலொன்றுங் காணறியாய்—மண்காண்
உனக்கில்லை வேறே யுளறத்தான் வல்லை
யுனக்குநிக ரெங்கேதா னேது. (உ௬௬)

பிறந்திறக்கத் தக்கதோ பேதாயித் தேகம்
பிறந்திருக்குந் தேகியெனப் பேசிற்—பிறந்திறக்கக்
காணு யதைநீ கடையி லெழுமென்னை
வீணுயேன் சொல்வாய் விதி. (உசுஎ)

உண்ணச் சுகித்தற் குபாயநினக் கில்லைநீகர்
மண்ணனல் காணுய் மதியில்லாய்—பண்ணும்
மகிமையா லேதெய்வ மண்ணனந்தம் பேருண்
டஃதான் மதியே மறிந்து. (உசுஅ)

நாமுண்ணப் பட்சிமுத னல்லுயிர்செய் தானென்னை
நாமா ரெனக்காண நாட்டமிலை—ஏமம்
புகுவாய் சிலவுண்ணப் புன்புலா லென்னி
னகுவாரோ கேட்டார் நனி. (உசுகூ)

மணற்சோற்றிற் கல்லாய்தன் மாருமோ நின்சொல்
உணத்தான் பழகி னுதவும்—நினைத்திற்
சுவையறிநா வன்ருே சுகித்தானெங் குண்டாம்
நவையாநின் னல்வேத நாடு. (உஎ0)

ஏழாநா ளாரா லியலும் பிறப்பிறப்பிங்
கேழாநா ளோய்விக் கிடமில்லை—ஏழி
லுனதொழிவு பற்றி யுளறிற் றவர்மேல்
உனக்கெங்குண் டாமுத்தி யோது. (உஎக)

இச்சைப் பெருக்குக்கிங் கின்றேசா திப்பேதம்
மெச்சுமுத்தி யெங்ஙனுண்டா மெய்யிழந்தோய்—சிச்சி
யினிப்பிறப்ப தில்லென்னை யெவ்வாறித் தேகஞ்
செனித்ததற்கு ஞாயமுண்டோ செப்பு. (உஎஉ)

தன்னிச்சை யாற்கடவு டானேதந் தானென்னிற்
றன்னிச்சை யாற்பின்னுந் தான்றருவன்—என்னே
மறைபொய்க்கு மென்னின் மறையும்பொய் யாமே
யிறைவாக் கியமென்னி னென். (உஎஙு)

இம்மை சுகதுக்க முற்றுமிறை யாலென்றும்
அம்மை சுகதுக்க மாமுயிர்கள்—இம்மை
நடத்தையா லென்று நவிறன் முறையோ
மடத்தன்மை யாமே மதி. (உஎச)

ஒருபோ திறையா லொருபோ துயிரால்
வருதுன்ப மின்பமெனின் வாயாற்—சரியாகா
தென்றுமுயி ராலென்னி னெண்ணிற் பிறப்பாகும்
என்னேவிவ் வாறுரைப்பா யிங்கு. (உஎரு)

இப்போது செய்வினையா லின்பத்துன் பம்வருமேல்
இப்போ தனுபவிப்ப தெப்போதோ—செப்புகையின்
முன்பிறப்புத் தானுண்டேன் முன்னின்ன தென்றறியேம்
என்பையேற் கேளா யினி. (உஎசு)

தேகநா னென்கை தெரியாத தேனுறங்கின்
ஆகநான் முன்பின் னறிவனோ—நீகாணு
முன்னை யறியா யுடலாதி யன்றியே
யுன்னையன்றி யெங்கே யுடல். (உஎஎ)

எல்லா மிறையா லியற்றப் படுமாயின்
எல்லா விதிவிலக்கு மென்செய்யு—மெல்லாம்
உயிராலென் றோதி லொருபொழுதன் றென்றும்
உயிருக்கிங் கோய்வில்லை யோர். (உஎஅ)

வெறும்பெயரோ தெய்வம் விவர்த்தமுரு வென்னின்
அறிவா யருவென்னி னாமோ—குறிகோடல்
அன்னோன் பெருமை யறையப் புகினென்னின்
என்ன குறியா லிசை. (உஎகூ)

ஒருகுறியு மில்லையெனி னோயாப்பா ழாகும்
பெரியகுண மேற்பதெனிற் பேதாய்—பெரியகுண
மெல்லா முருவத்தி லேற்றித் தொழுவார்போ
லெல்லா வுருவுக் கிது. (உஅ0)

ஏலா துருவென்னி னெல்லா முருவென்போ
மாலாஞ் சடமென்னின் மற்றருவு—மேலோஞ்
சடமென்னத் தோடமுண்டோ சாற்றுதே யென்னின்
இடமுண்டோ காணத்தா னிங்கு. (௨௮௧)

காணவறி யாதாயிற் கண்டுலகந் தந்ததெது
காணினஃ தாமென்னிற் காணுமோ—பேணித்
துதித்தற்கு நின்குறையைத் துன்றியஃ தெங்கும்
மதித்துத்தான் கேட்குமெனின் மற்று. (௨௮௨)

எங்கு மிருக்கி னிடமெங் குயிருலகுக்
கங்கதிரு னென்னி லறியாதே—னெங்கும்
இருப்பதினு லென்னி னிருக்குமிடத் தின்றோ
இருத்தினுங்கா ணுதென்னி னேன். (௨௮௩)

அருவத்தா லென்னி னருவமுயி ரன்றோ
அருவா யினுமறிய லாகா—துருவன்றி
என்றுலது சித்தோ வேனையதோ காணுமிடத்
தன்றுஞ் சடமென்னி னும். (௨௮௪)

அறிவதனுற் சித்தென்பை யத்தொழிலுக் காதி
யறியா யுனைநீ யறியாய்—வெறியாகேள்
தேகாதி தொந்தமன்றிச் சீவேசர் தாமறியாய்
நாவாகா தேனறைவாய் நாடு. (௨௮௫)

கண்மூடித் தோத்திரம்போற் காட்டி யுலகளிப்பை
கண்மூடி மெய்யனைப்போற் காண்பிப்பை—கண்கெட்
டலைவார் வழிகாட்ட லாநின் வசநம்
புலையாநின் வாய்நாறும் போந்து. (௨௮௬)

உண்டென்னிற் காட்சிக் குதவா திங் கின்றென்னின்
உண்டோ தொழிலொன் றுடலின்கண்—கண்டிலைகொல்
ஞாயமின்றி வாதிப்பை ஞாயமிலா வேதத்தை
ஞாயம் பொதுவன்றோ நாடு. (௨௮௭)

எச்சமயத் தோரோனு மென்பிரமா ணத்துள்ளார்
மெச்சுமது யாதென்னின் மெய்க்காட்சி—நச்சுமனு
மானஞ் சுருதியுப மானமருத் தாபத்தி
தானபா வத்துடனே தான். (உஅஅ)

சம்பவமை தீகமெனச் சாற்றுமுதற் கூறிரண்டா
நம்புவிட யக்காட்சி ஞாயமிவை—தம்பத்
துடலாதி யாரு யுனும்விடயக் காட்சி
திடஞானக் காட்சியோ தேர். (உஅகூ)

புலன்கரணஞ் சீவன் புகலீசர் தம்மை
விலகாக் கரியிரண்டும் விட்டுப்—பலவாகப்
பேதித்த காரணத்தைப் பேதியா தொத்துணர்தல்
ஆதிஞா னக்காட்சி யாம். (உகூ0)

ஐயம் விபரீத மாகாது மெய்யுணரின்
வையத்தின் முத்தி வருமென்ப—துய்ய
தெரிவன்றிக் காணுர் தெரியார்வே ருவர்
தெரிவன்றி யுண்டோ தெளி. (உகூக)

அரவோ கயிறோவென் றையுறுத லையம்
அரவே கயிறென் றறியிற்—றிரிபாகும்
இப்பிரமை தானீங்க லெவ்வழியா னுந்தெளிதல்
செப்பிதற்கோர் தாட்டாந்தந் தேர். (உகூஉ)

உலகோசித் தோமெய்யென் றோர்தரு லையம்
உலகேமெய் சித்தென் றுணரி—னிலைபிறழ்தல்
ஞானே தயத்தாலே நாசப் படும்பிரமை
மேனோக்கத் தாற்றெளிதன் மெய். (உகூங)

அத்தெரிவு காணு ரனுமானத் தாலறிவர்
அத்தெரிவுண் டாயி னறியுங்காண்—இத்திரத்தால்
எவ்வுயிரு மத்தெரிவே யின்றே லுணர்தலிலை
இவ்வாறு காணுர்க் கிலை. (உகூச)

காரியத்தை நேராகக் கண்டுமுத லுண்டெனலாங்
காரியம்போற் காணிற் கணியோமே—தேரிற்
பிரதிஞ்ஞை யேது பிரமாதிட் டாந்தம்
பிரதிவாதிப் பார்களே பின். (உகரு)

இம்மலையி லக்கினியுண் டென்றல் பிரதிஞை
இம்மலையி லுண்டாதற் கேதுவுமென்—இம்மலையில்
அக்கினிக்கல் வேயாதி யாங்கவற்று லுண்டாகும்
இக்கருத்தைப் போலென் னெனின். (உகசு)

இவ்வுலகிற் சத்துண் டெவருஞ் சொலத்தகுங்காண்
எவ்வாறிங் குண்டாகு மென்னினோ—அவ்வாறு
தன்னைவே றுக்காணச் சங்கற்ப மாய்ந்திங்கு
தன்னுபா திக்கண்ணுற் றுன். (உகஎ)

அக்கனல்காட் டுந்தூம மாய்ந்துணர்ந்தோ ரோதென்பர்
எக்கரும முங்காட்டு மின்புளதென்—றிக்கருத்தால்
என்னறிவின் பாலதெனி னிவ்வறிவே சத்தாகும்
நன்குணர்ந்தோர் காண்பார் நனி. (உகஅ)

அறிவன்றிக் காணு தகிலமெனி னின்பம்
அறிவன்றிக் காணுமோ வாகா—தறியுங்காற்
றிட்டாந்த மேயுனது தீர்ப்பாக சாலையே
திட்டியத னூற்கண்டு தேர். (உகக)

சித்துடைய இவ்வுலகிற் றேறினது நீயுடைமை
யெத்தொழிலு முன்பா லியங்குமோ—அத்தொழிலால்
உன்னிடத்திற் காணலா முன்னையன்றி வேறில்லை
யுன்னைநீ கண்டா லுறும். (௩00)

வெதிரேக மந்வயமும் வேண்டினரு முண்டே
மதிமோக மெங்ஙனே மாய்வர்—மதிமோகம்
உண்டில்லை யேனு முளதாகு மத்தெரிவு
ண்டிலைகொ லத்தெரிவு காண். (௩0க)

அன்வயமோ வென்னி னனலுண் டேற்புகையுண்
டின்றேற் புகைதானு மின்ருகு—மென்றுற்போற்
சித்துத்தா னுண்டேற் செகந்தானங் குண்டாகுஞ்
சித்தின்றே லுண்டே செகம். (௩௦௨)

வெதிரேகந் தூமமுண் டேல் வெந்நெருப்பங் குண்டாகும்
எதிர்தூம மின்றேனு மின்ருே—கொதிக்குமெனல்
போன்றறிவாய்ச் சித்துலகம் பூரணமாங் காட்சிதரும்
ஊன்றியறி வார்க்கென் றுணர். (௩௦௩)

அனுமானத் தாலே யறியாது தன்னை
அனுமானம் வாதித் தறியிற்—பினமாகும்
எங்கெங்குந் தூலாதி யெத்துயர்க்கு மாளாக்கும்
அங்கங் கறியாமை யால். (௩௦௪)

சுருதிப் பிரமாணஞ் சொல்லுமிரு கூருய்ப்
பிரபலத்தோ டற்பமெனப் பேசிற்—பிரபலந்தான்
சிற்சோதி லட்சணத்தைச் செப்பும் பிறிதென்றே
கற்பிக்கும் வேருகக் காண். (௩௦௫)

கற்பனைதா னென்னவெனிற் காணுத சிவேசர்
அற்பவுபா திப்பேதத் தாலொன்னுஞ்—சிற்சோதி
காணு தபக்குவர்க்குக் கண்டுணர்த்தும் வேதமெனின்
வீணுகா தந்த விதி. (௩௦௬)

விருந்தளிப்பான் செய்த விவிதச் சுவைப்போற்
றெரிந்தளிக்கும் வேதமெனிற் றீதோ—பரிந்துண்ணும்
யானைக் கரும்பை யதின்றழையை யாணெண்ணு
மேனையங் காணு மிதில். (௩௦௭)

கானற் கரையிற் கதலிவனம் போலுமே
ஈனச் சுருதி யிசைக்குமுத்தி—வானிழியுங்
கங்கைக் கரையிற் கதலிவனம் போன்முத்தி
இங்கச் சுருதி சொலும். (௩௦௮)

அறிவுக்கு வேறாய் ஆனந்த மெனத்
அறிவின்பங் காணி னழியா—தறிவாவம்
என்னுங் கருத்தா விசைக்கு மறைநான்கும்
அன்ன தறிவா யகம். (௯0௯)

பத்தி கருமம் பகரிரண்டு காண்டமொன்றே
பத்திக்கு முத்தி பதவியெனிற்—பத்திமுத்தி
ஏழைக்குச் சொல்வனென விவ்வயிக்க முத்தியோ
தாழச்செய் யும்பதவி தான். (௯௧0)

மந்த்ரகலை தந்த்ரகலை மாவிலுப தேசகலை
யிந்த்ரசா லத்துலகர்க் கேற்பவே—தந்த்ரமதாய்ச்
செப்புமறை யாகமங்கள் சிந்தித் துணர்ந்தார்க்குத்
தப்பில் கதியளிக்குந் தான். (௯௧௧)

திட்டம திட்டமெனச் செப்புமுவ மானந்தான்
திட்டமறை யாபோலச் சிற்சொருப—நிட்டையின்கண்
ஆத்துமா னந்தம்போ லாகுஞ் சிவானந்தங்
காத்திருப்பார்க் காமேயிக் கண். (௯௧௨)

அதிட்டஞ்சா யாபுருட னுங்குள்ளான் போலவவன்
அதிட்டான வான்மாப்போ லாகுங்—கொதிக்கும்
அனுத்துமா வென்றறைய லாங்கதனைக் காணார்
கனுக்காட்சி காணுப்போற் கண். (௯௧௩)

சோதிமய மாய்வெளிபோற் சொல்ல வளவில்
சோதிமதிப் பூரணம்போற் சொல்லுமே—சோதிமயச்
சிற்சோதி தன்னைச் சிறந்தவுவ மானத்தாற்
றற்சொருபங் காண்பார் தலை. (௯௧௪)

இவ்வாறு கொள்ளா தினியவுருப் போற்கொள்வர்
இவ்வாறு கொள்வாரு மிங்குண்டு—செவ்வியதாய்த்
தம்மையறி வேவடிவாய்த் தாங்காணிற் பொய்க்குமே
நம்மையலால் வெவ்வேறு நாம். (௯௧௫)

சிரவணமுந் திட்டமுமாச் செப்பருத்தார் பத்தி
சிரவணம்விட் டில்லாலைச் சென்றான்—பரவுகருத்
தால்வெளியி லொன்றுணரத் தக்கதுபோ லெவ்வுயிருந்
தோல்வீட்டி லின்றென்னிற் சொல். (௫௧௬)

எங்கெங்குந் தானா யிருக்கு மறிவினெனிற்
சங்கைக் கிடமுண்டோ சாற்றுங்காற்—பங்கம்
அறித்தகலுந் திட்டந்தா னன்னபா னாதி
வெறுத்தேனென் பானொருவன் விட்டு. (௫௧௭)

அவனுடல்பூ ரிப்பானே னாகார மின்றேல்
அவன்கரவி லுண்பானென் றாற்போல்—எவருந்தாம்
ஆனந்தந் துய்த்திலரோ லாணவத்தாற் பூரிப்பேன்
ஆனந்தி யன்றோ வவர். (௫௧௮)

அறிவே யுயிராயி னானந்தம் வேறோ
அறிவின்பம் வேறாகா தாயிற்—பிறிதாகத்
தன்னின்பம் போல்வேண்டிற் றன்னின்பம் போல்பவோ
தன்னின்பில் வேறுண்டோ தான். (௫௧௯)

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தால்
நவநவமா மின்பமெனி னன்றே—நவநவமுங்
கண்டு களிப்பதனைக் காணாத வன்போலுங்
கண்டால்வே றென்பையோ காண். (௫௨0)

முன்பின் னிடையென்று முற்றுலகு மில்லையேல்
என்கபா வத்தா னியம்புமே—முன்னர்
உலகில்லை யென்பதெங்ங னுண்டோசித் தன்றி
இலதெங்ஙன் பின்னுண்டே லின்று. (௫௨௧)

எவ்வாறு காணன்முன் னின்றாய்ப்பின் னுண்டாமோ
அவ்வா றுலகம்பின் னாமென்ன—அவ்வாறு
தோற்றமல வேயுலகந் தொன்றுதொட்டு வந்ததெனிற்
றோற்றுலக மென்னபொருள் சொல். (௫௨௮)

சராசராந்தா னென்னிற் சராசரந்தான் யாதோ
சராசரந்தான் சிவனெனச் சாற்றிற்—சராசரத்தைக்
காணா தனவென்றிக் காணுமுரு வென்னினோ
காணாய்ப்பூ தந்தவிரக் காண். (௯௨௩)

பூத முயிரென்னிற் பூத முணராதே
பூத முலகென்னிற் பொன்றுமே—பூதந்தான்
மெய்யா யிருக்குமெனின் மெய்யா யிருப்பதெதில்
ஐயறிவி லென்றோ லறி. (௯௨௪)

ஐந்தறிவுக் கேதிடமோ வையோ மனமென்னின்
இந்தமனத் துக்கிடந்தா னெங்ஙனே—இந்தமனம்
ஆன்மாவி லென்றுணர்த்தி னான்மாவுக் கேதிடமோ
ஆன்மவடி வாஞ்சிவத்தி லாம். (௯௨௫)

இவ்வாறு காணுங்கா விச்சகந்தான் காணுமோ
இவ்வாறு காணாதார்க் கிவ்வுலகே—இவ்வாறு
காணு மஃதன்றிக் காணு சிவமணுவும்
பேணிச்சொல் லாற்றுதிப்பாய் பேய். (௯௨௬)

காண்பானைக் காண்பார்க்குக் காணுலகங் காணாதே
காண்பானைக் காணார்க்குக் காணுமே—காணுலகம்
நம்மிடத்தி லேதோன்றி நம்மிடத்தி லேமறையி
னம்மையல்லா லுண்டோ நவில். (௯௨௭)

நம்மையறி வேவடிவாய் நாங்காணி னெப்போதுஞ்
செம்மை யுலகத் திரள்காணோ—நம்மை
யறியாத நாளெல்லா மாணவத்தாற் கெட்டோம்
அறிவே யுலகென் றறி. (௯௨௮)

பணிமுன்பொன் போலப் படைப்பின்முன் சித்தே
அணிபின்பொன் போலசித்து மாகும்—அணியழகைக்
காணிற்பொன் னேமாற்றுங் காணா ததின்மறையுங்
காணுங்கொ லொன்றிலொன்று காண். (௯௨௯)

என்பதுபோற் சித்தை யிலக்கணையாற் காணுங்கால்
இன்புருப்போற் றேன்றுலக மில்லாகும்—துன்புலகைக்
காணுங்காற் சித்துதயங் காணு தின்மறையுங்
காணுமுரு வன்றிலொன்று காண். (௫௫௦)

பொன்னே பணியாயிற் பொன்னன்றி வேறில்லை
பொன்னே பணியாய்ப் பொலியுமே—இன்னே
அறிவே யுலகே லறிவன்றிக் காணேம்
அறிவா யிலகு மது. (௫௫௧)

சம்பவந்தான் யாதோ சகத்திர்ப்பி லொன்றேபோல்
நம்பரத்திற் கூடத்த னுடுங்கால்—சம்புவன்றிக்
கூடத்தன் வேறேதான் கூடத்த னுக்கயலன்
றேடிக்கண் கண்டார்க் குறும். (௫௫௨)

ஒன்றே பலவாகு முற்றபல வேயொன்றும்
நன்று யுணர்ந்தோர்க்கு நாடுமே—யொன்றுபல
பேதந் தனைத்தவிர்க்கும் பேதமிலாச் சம்பவம்போ
லேதுசம யஞ்சொலுமோ வில். (௫௫௩)

இம்மரத்திற் பேய்தா னிருப்பதென லௌகிகம்
இம்மரமே பேயா யிருக்குமே—இம்முறையே
சத்தியம்போற் காணுலகிற் சத்தொன் றிருப்பதெனிற்
சத்தாய் விளங்குஞ் சகம். (௫௫௪)

சத்தொன் றிருப்பதெனச் சாற்றுவதெவ் வாறென்னிற்
சத்தொன் றிராதாயிற் றுனைசையா—சத்தொன்
றிருப்பதனு மானந்தா னின்றியமை யாதே
அருத்தமத னுலறியி னும். (௫௫௫)

பின்னருத் தாபத்தி பேசியதை வற்புறுத்தும்
இன்ன குணங்குறிய தென்னுமறை—யன்னவற்றை
யொத்திருப்ப தென்னு முவமானஞ் சம்பவந்தான்
எத்தனையுஞ் சத்தொன் றெனும். (௫௫௬)

இவ்வரவுங் கற்பனைதா னென்றறிய விக்கூறும்
அவ்வரவுஞ் சிற்சோதி யாகுமே—திவ்வியநற்
காட்சியெனி லென்னகுறை கண்டாரின் றேற்பரோ
காட்சிவிட யத்தார்போற் காண். (கூகஎ)

இப்பிரமா ணத்து ளெவரோ துடைய ரெனின்
ஒப்பாலோ காயுதனுக் கொன்றேகாண்—தப்புலகம்
வேதாந்திக் கொன்றேகாண் வேறுஞா னக்காட்சி
நாதாந்தங் கண்டுணர்ந்த நான். (கூகஅ)

ஏனையோ ருக்கோ விரண்டுமுத லேழளவாம்
ஞானகதக் காட்சிக்கு நாடாரோ—யீனறிவால்
தந்தமதிக் கேற்றபடி தாங்கொண் டலைவார்கள்
எந்தவிதத் துய்வா ரிவர். (கூகக)

ஞானகதக் காட்சிக்கு நாடாத காரணமென்
தானமையும் பக்குவத்திற் றக்கபடி—ஞானமுறும்
பக்குவந்தா னெந்தாகும் பாழ்மூடங் கன்மபத்தி
கக்குலக மிக்கதிடங் காண். (கூசo)

இவ்வைந்துங் காமியமே யீயும் பதவிசுகம்
திவ்வியநிட் காமியத்தாற் றீருமே—யவ்வழியே
ஞானப் பிரகாச நண்ணு மஃதுடையார்
ஈனமிலா மூவரென வெண். (கூசக)

அப்யாசி நல்ல வனுபவியா ரூடரெனல்
அப்யாசி நிட்டை விடா தச்சோதி—கைப்பில்
இதுநா னிதுநானென் றெப்போதுங் காண்பன்
அதிசயா னந்தமல தால். (கூசஉ)

அனுபவியோ வென்னி லகலா தொளியின்
முனங்கண்ட தூலாதி முற்றுந்—தினங்காணிற்
சிற்சோதி யாயொளிருஞ் செல்வவினை யாட்டுடையன்
அற்புதா னந்தாழி யான். (கூசங)

ஆருடனே வென்னி லறப்புங்கா ளாதுலகைப்
பேரொளியா நின்றொளிர்வன் பேதமுறான்—தேரின்
அகம்புறமொன் றில்லா னறியார்போற் காண்பான்
இகபரமொன் றில்லானென் றெண். (௬௪௪)

ஆரூடர்க் கில்லை யனுபவிக்கொன் றப்யாசிக்
கோரிரண்டு சென்மமென வுய்த்துணர்க—தேருங்கால்
இந்நிலையி னின்றொழுகி னிக்கணிதந் தப்பாரோ
இந்நிலைபோல் வேறொன் றிலை. (௬௪௫)

அஞ்ஞான ஞானதசை யாராயி னேனையரும்
மெய்ஞ்ஞானக் காட்சிதனின் மேலிடுவர்—மெய்ஞ்ஞானம்
வாசித்தன் மாத்திரத்தால் வன்பிறவிக் கோய்வில்லை
பேசத்தான் கற்பார்கள் பேய். (௬௪௬)

அஞ்ஞான பூமியெனி னாராயி னேழாகும்
விஞ்ஞான மாறாய் விழையுமே—யஞ்ஞானம்
விந்துமகா சாக்கிரமும் வீண்சாக் கிரகனவும்
இந்திரசா லக்கனவு மே. (௬௪௭)

சொப்பனத்திற் சாக்கிரமுந் தோன்றாச் சுழுத்தியுமாச்
செப்பிடுவ ராய்ந்துணர்ந்தோர் தேருங்கால்—அப்பிரமத்
தத்தியா ரோப மபவாத மென்றவற்று
ளத்தியா ரோபமிஃ தாம். (௬௪௮)

கானனீ ரென்றுங் கயிற்றரவு தானென்றும்
ஈனவறி வாற்கொள்ளு மெண்ணம்போற்—றானறிவாக்
காணாது வேறாக் கருதலத்தி யாரோபம்
வீணா விளையும் வினை. (௬௪௯)

சுட்டப் படாததனைச் சுட்டுமறி வேவிந்து
சுட்டறிவே முக்குணமாத் தோற்றுமே—சுட்டறியின்
மாசாக் கிரமென்பர் மற்றதான் மும்மூன்றும்
பேசாத் திரகனவாம் பின். (௬௫௦)

கத்தாபோத் தா[illegible]ப்பனமாம்
கத்தாபோத் தாபூதக் காட்சியே—சத்தாகக்
காணிற் கனவதுவாம் காணிலுருப் போலொழிவிற்
பேணுங் கனநனவாம் பின். (ருடுக)

கற்பனையுந் தூலமும்போற் காணுமுருப் போலியிவை
அற்பமுங்கா ணுவிருளு மாயாமை—சிற்சொருபக்
காட்சியுண ராமருளுங் காணுமை யேசுழுத்தி
மாட்சியுணர் வாலே மதி. (ருடுஉ)

இவ்வாறு கொள்ளாதா ரெவ்வாறு கொண்டாலும்
அவ்வாறு மெம்மனோர்க் காகுமே—செவ்வாறு
சிந்தித் துணரவல்லார் தேரவது தீரவென்
றந்தமற்ற தற்காணி லாம். (ருடுங)

நல்ல சுபேட்சையுட னும் விசாரணையுஞ்
சொல்லுதனு மானசியுஞ் சோதிக்கில்—நல்லமிர்தச்
சத்துவா பத்திசம் சத்திபதார்த் தாபாவம்
மெய்த்ததுரி யப்பூமி மெய். (ருடுச)

விடமதனுன் மொத்துண்டு விட்டுப்பே ரின்பந்
தடையின்றிப் பேசற்குத் தாகம்—அடைதல்
சுபேட்சை விசாரணையோ சுத்தனு லாய்தல்
உபேட்சைதன் மானசியென் றோர். (ருசடு)

மெய்ஞ்ஞானக் காட்சி விளங்கல்சத்து வாபத்தி
பொய்ஞ்ஞானக் காட்சியெல்லாம் போயொழியுஞ்—சுஞ்ஞா
உளன்றிலசம் சத்தியென் றேதுபதார்த் தாபாவம் [னம்
ஆன்றதுவி தப்போக் கறி. (ருடுசு)

வெளிமயமாங் கற்பாறை வெட்டியறி வார்போ
லொளிமயமாஞ் சிற்சொருபத் தொன்றும்—வெளியாகா
தென்று மொருபடித்தா மென்றே யதுவாகை
நன்றுந் துரியமென நாடு. (ருடுஎ)

முப்புடி தானளவு முற்றுலகுந் தோற்றுமே
யப்பான்முக் கானான்கி லாகுமே—செப்பைந்திற்
பாதியா ரிற்காலாம் பற்றொன் றிலையேழிற்
பேதியா ருற்றுணர்ந்த பேர். (௩௫௮)

சிற்சோதி தானானாற் செப்பதி தம்வேறோ
சிற்சோதி யாகாதார் செப்புவார்—சிற்சோதி
யன்றியா னந்தமுண்டே லாகு மதிதந்தான்
இன்றாயி னுண்டோ விசை. (௩௫௯)

வெற்ற வெளியளவோ வெற்றகுடந் தானளவோ
சிற்றுயிருந் தேகமுந்தான் சிந்திக்கிற்—கற்றுணர்ந்தீர்
ஞானமின்றிச் சொல்லன் ஞாயம் பொதுவன்றோ
ஞாயமிலா துண்டோ நவில். (௩௬௦)

கேவலமா மூன்றுங் கிளர்சொப் பனமூன்றும்
ஆவவிலாச் சாக்கிரந்தா னாமேழே—யோவியம்போல்
ஆக்குமிதி னுண்மை யறியாதார்க் கென்னுண்டாம்
போக்குவர வெங்கேதான் போம். (௩௬௧)

அறிவுக்குக் கற்பந்தா னாமுப் புவியும்
அறிவுதைய நான்கா மறியின்—அறிவளர்ச்சி
பாலப் பருவமைந்தாம் பன்னுகுமா ரத்தாறாஞ்
சீலக் கிழமேழாத் தேர். (௩௬௨)

துரியநிலை யொன்றே தொலைக்கும் பிறவி
அரியநிலை யாருக்கு மாங்கே—வரும்பிறவி
யொவ்வொன்று மேலாகு மோதுசு பேட்சைமட்டும்
செவ்வை நினைநினையாத் தேர். (௩௬௩)

அபவாத மிவ்வேழு மாமென்பர் மேலோர்
அபவாதம் பொய்பொய்ய தாக்கி—யுபமானம்
பாம்பன்று செத்தை பணியன்று பொன்னாக்கி
வேம்புலகா னார்க்குதவும் வீடு. (௩௬௪)

சுபேட்சையொன்று கிட்டல் சொற்பமோ கேளீர்
அபேட்சையதில் வாரா தருமை—யுபேட்சை
விடயத்தில் வந்துவிடில் விட்டுப்பே ரின்பந்
தடைவரினுந் தானே தரும். (௬௫)

பந்தமுத்தி யேதெங்ஙன் பார்க்கின்ற னேதன்பால்
அந்தமற்ற சிற்சோதி யாகுமே—யிந்தநிலை
காணி விரண்டல்ல காணுதார்க் கொன்றல்ல
வீணிதென் றுதுணர்க வீடு. (௬௬)

சித்தப் பிராந்தி செகப்பிராந்தி யென்றிண்டாஞ்
சித்தப் பிராந்தி தெரிவிழப்பே—சித்தம்
மறைக்குஞ் செகப்பிராந்தி மாயும்யோ கத்தாற்
சிறக்குமது ஞானத்தாற் றேர். (௬௭)

சித்தந் தெளியிற் செகமயக்கங் காலொழியுஞ்
சித்தங்கண் காணிற் செகங்காணு—பித்தறிவார்
பூசித் ததனுலும் புண்ணியத்தா லும்போகா
ஆசை மயக்கென் றறி. (௬௮)

மதியன்றி யில்லை மயக்கந்தான் மெய்யே
மதியோதான் மாயையெனின் மாணு—இதினுண்மை
காண்பரியா யத்தாற் கழிகுணத்தா லென்றறைய
மாண்புடையோ யெங்ஙனெனின் மற்று. (௬௯)

தம்மாயை மோகம் தடையா மவித்தை
அம்மாறு வித்தையிவை யாகுந்—தமந்தானுந்
தன்னை மறைக்குமிரு டன்னையுல காக்காட்டித்
துன்னுவதோ மாயையெனச் சொல். (௭0)

தன்னினப்பைத் தானே சகப்பிரிய மாக்கியெங்கும்
மன்னுவதே மோகமெனல் மக்கினமாத்—தன்னை
யறிந்துமறி யேனென்கை யாமவித்தை மித்தை
வெறும்பெயரோ தன்னுருத்தான் வேறு. (௭௧)

அசத்துசடந் துக்க மநித்தமுடன் கண்டம்
வசத்ததுதா னென்பர் மகான்கள்—அசத்தென்னில்
வான்மலரோ போலு மதியொன்றில் லாச்சடமாம்
மின்காட் டிடைசுகத்தின் மேல். (௩௭௨)

ஆருறு தத்துவமு மாணவமுங் கண்டமதே
மாருக வேநின்று மாறுமே—தேறில்
அநித்தமென லைந்து மதினிலக்க ணந்தான்
இனிக்குணந்தான் யாதோ விசை. (௩௭௩)

சத்து மசத்துஞ் சதசத்தும் பின்ன பின்னம்
ஒத்தபின்ன பின்னமுட னேருங்காண்—மெத்துகின்ற
சாவயவமு மன்மையுடன் சாற்று முபயமுமே
மேவுதுச்ச நித்தியமு மேல். (௩௭௪)

தோற்றுமநிர் வாச்சியமுந் தொல்லங்க சங்கமுடன்
சாற்று சுகந்தாமுஞ் சார்பின்மை—ஆற்றும்
விரிவொடுக்க சேதனமும் வீயாவ சேதனமும்
பெருகுசுத்த மோடசுத்தம் பேண். (௩௭௫)

பரிச்சின்னந் தோற்றம் பலவாம் விகாரம்
உரித்தா மிவற்றை யுணரின்—தெரித்தமுதல்
சத்தாவ துள்ளதுபோற் சந்ததமுங் காணுமே
புத்திவிகா ரத்தவர்க்குப் பொய். (௩௭௬)

அசத்தாவ தில்லை யறிவுக் கயலோ
யசத்தாவ துண்டில்லை யாகும்—நிசத்திற்
பிறிதாகத் தோற்றுலகம் பின்னமென்பர் தன்னுட்
செறிவதாக் கண்டபின்னந் தேர். (௩௭௭)

பிறிதாயு மல்லாமை பின்னபின்ன மாகும்
அறிவா யனைத்துலகு மாதல்—உறுப்பாகும்
எல்லாஞ் சுயஞ்சோதி யேகவெளி யாய்விளங்கல்
இல்லா வுறுப்பென் றிசை. (௩௭௮)

எல்லாமா யல்லவுமா யேற்கு மனுபவமே
நல்லா ருபயமென்பர் நாடுங்கால்—சொல்லான்
மலடிமக னென்ருர்போன் மாயையென் றுந்தம்
இலகுயிர்போ னித்தியமென் றெண். (௫௭௯)

அநிர்வாச் சியந்தா னறியா தறிவை
தனுகரண மாக்கோடல் சாரும்—தனுகரணம்
நாஞ யிருந்துமவை நானன்மை சங்க சங்கம்
ஞானுகா ரத்தவற்கு நாடு. (௫௮௦)

சுதந்தரந்தான் யாதோ தொலையாக் கருவி
சுதத்தறிய நாக்காட்டும் தோற்றம்—சுதந்தரந்தா
னின்மையா தென்னி னெனைக்காணி னில்லையே
நன்குணர்ந்தோர் காண்பார் நனி. (௫௮௧)

அகிலமுழு தாய்விரிந்து மாகா தடங்கும்
பகிர்முகத்த தாமவர்க்குப் பாராய்—நகையாகும்
சேதனந்தா னெவ்வெவர்க்குஞ் சேட்டிப்ப தாத்தோற்றுஞ்
சோதனையிற் ருனுண்டோ சொல். (௫௮௨)

அசேதனந்தா னம்மை யறிவாகக் காணின்
அசேதனமா மாயையுந்தா னங்கே—நிசாதிகடாம்
இல்லாத சுத்த மிருப்பதுதான் சுத்தமென
லெல்லா மிருந்து மிலை. (௫௮௩)

காலம் பொருளிடமாக் காணில் பரிச்சின்னம்
சீலமறி வைப்போலச் செப்புலகம்—மேலாகத்
தோற்றுவதே தோற்றந் தொலையா மலமயமே
சாற்றுவிகா ரப்பெயரோ தான். (௫௮௪)

இம்மாயை போதற் கெதுதந் திரமென்னிற்
சும்மா விருக்கிற் சுகஞ்சுகந்தான்—இம்மாயை
கேள்விமன னத்தெளிவுங் கேடில் சமாதியுடன்
ஆள்வெளிப்பட் டாலிங் கறும். (௫௮௫)

கேள்வி யுபக்கிரம[illegible]
நாள்கடக் கும்படியா நற்பலமுங்—கோளில்
அபூர்வதையுற் பத்தி யருத்தவர் தங்கள்
அபூர்வனா னக்கேள்வி யாம். (௯௮௬)

உபக்கிரமஞ் சித்தே யுலகாதிக் காதி
உபசங்கா ரந்தா னுலகை—யபவாத
மாக்க மனத்தி லறிவாக்கி யம்மனத்தைத்
தாக்கற்ற தாவிளங்க ருன். (௯௮௭)

இவ்விரண்டு மொன்றே யினித்தவப்பி யாசந்தான்
திவ்விய சிற் சோதியே தேற்றதோ—யெவ்விடத்துங்
கண்டிதுநா னென்றே கணந்தோறு மாருது
கண்கள்கண் டேபழகல் காண். (௯௮௮)

பலமாவ தெங்கும் பரிபூ ரணமா
யலகிலாச் சிற்சோதி யாகி—யுலகனைத்துந்
தன்னையன்றிக் காணமை சாற்றுகின்ற பூர்வதையோ
உன்னளவுக் கும்மடங்கா தோர். (௯௮௯)

காட்சியள வுக்கன்றி காணு தறிவளவுக்
காட்சியுற் பத்தியெனி லாயுங்காண்—மாட்சி
யறிவே யுலகாதிக் காதியெனக் காண்டல்
அறிவானுர் சொல்வா ரறி. (௯௯௦)

அருத்தவா தந்தா னறிவே வயமா
யிருக்கும் பிரமத் தியற்கை—சிருட்டிமுதல்
ஐந்துக்குங் கர்த்தா வதுதானே யன்றியிலே
யுய்ந்துபோ மாறென்றே யோர். (௯௯௧)

சிரவணந்தா னிவ்வாறு செப்பு மனனந்
திரிவிதத்த தாமவற்றைச் செப்பில்—ஒருவாத
உத்தியனு மானமோ மோயாத தர்க்கமிவை
யுத்தியது கேடுகோ ளுற்று. (௯௯௨)

அறிவே யுலகென்ப னத்துவிதி பேதி
யறிவன்றி வேறென்ப ஞயின்—அறிவன்றிக்
கண்டாருண் டோவுலகங் காணுமை யேனென்னிற்
கண்டா லறிவலரோ காண். (௩௧௩)

காண்பா ரறிவாயிற் காணுலகம் வேறென்னிற்
கான்பானை யன்றி யெங்கே காணுலகம்—மாண்பறிவுக்
கப்புறத்த தாமென்னி னவ்வறிவி னெல்லைகண்டோ
மப்புதனத் தாலோ மதி (௩௧௪)

மரணஞ் சுழுத்தி மயல்மூர்ச்சை மூன்றில்
கரணம் புலன்செகத்துங் காணு—நிருணயத்தால்
வேறிடத்த தாமென்னில் வேறுபிரித் துக்காட்டில்
வேறிடந்தா னென்போம் வியந்து. (௩௧௫)

தூலப் புறத்ததெனிற் றூலமறி வல்லவே
தூலந்தா னன்றளவுஞ் சொன்னதெனிற்—றூலம்
உலகத்தோ டொக்க வுணர்வன்றிக் காணேம்
உலகத்துக் கேதிடந்தா னேது. (௩௧௬)

பொறிகரணஞ் சீவன் புகலுடல மட்டே
யறிவுமுடன் மட்டென்ப மாயின்—அறிதொழிலால்
ஒத்திருப்ப தேனு முறக்கத்தறி வின்றே
எத்தொழிலு மற்று விசை. (௩௧௭)

பாராத போதுலகம் பார்க்கப் படாததினுல்
பாராதிக் கெவ்விடமோ பாம்பென்னிற்—றீரா
வறிவன்றிக் காணே மறிவே யுலகம்
அறிவுதய மாணு லறி. (௩௧௮)

ஆனு லுறக்கத் தறியப் படாதென்னை
தானு யுலகந் தனைப்பண்ணித்—தானே
அறிந்திழலு மாற்று லலுப்புற் றிருக்குந்
திறங்கண்டா லாங்கே தெரி. (௩௧௯)

ஓர்துரும்புஞ் செய்யே மூலகமெங்ஙன் செய்வமெனின்
ஆர்தா னறிகிற்பா ராச்சரியம்—ஓர்வரிய
சித்து முயற்சி செடமுயற்சி யென்றிரண்டாம்
அத்தனிழற் சித்திரம்போ லாம். (௪00)

இத்திறத்தா னெங்ஙனெனி னெவ்வுயிருஞ் சித்தலவோ
சித்துமய மானுற் செகங்காணர்—சித்த
விகற்பஞ் செகமாகும் வீண்கற் பனையால்
விகற்பவுல காமோ விதி. (௪0௧)

சித்தந் தெரியிற் செகநாசங் காணுமே
சித்தமரு ளாயிற் செகமாகும்—இத்திறத்தை
கண்டாற் கிஃதுண்மை காணுதார்க் கென்சொலினும்
உண்டோ வுணர்விங் குறை. (௪0௨)

மாருது தற்காணின் மண்ணுதி செய்வதெங்ஙன்
மாருத தன்னிழப்பின் மன்னுமே—தேறேனன்
என்ருர் திரிபுடியு மேகவெளி யாயொளிரும்
அன்றே தொழிலறுதி யாம். (௪0௩)

தெரிவன்றிக் காணும் செகசீவ ரீசன்
தெரிவே யிவையென்றுஞ் செப்பேம்—தெரிவேதான்
என்று மொருபடித்தா மீதுண்மை கண்டார்கள்
நன்றுதீ தென்னுர் நயந்து. (௪0௪)

கற்பனையே கர்த்தாவே காணு ரிதினுண்மை
யற்பமுஞ்செய் யெண்ணு ரஃதுண்மை—கற்பனையால்
அட்டமா சித்திசெய லாச்சரிய மல்லவே
நட்டதவத் தாலெண்ணி னுடு. (௪0௫)

தவமுயற்சி தன்னலே தானே முடியுந்
தவப்பலந்தன் னலன்றேற் றக்கோய்—தவமுயற்சி
தானே தரும்பலனைத் தாராச் சடமென்னிற்
தானன்றி யுண்டோ சடம். (௪0௬)

சித்துசட பேதம் சிதையாவொன் ருயினிதில்
ஒத்தா லகம்புறந்தா னேடமே—சித்துமய
மாத லருமை யறியாமை கேடருமை
யீதருமை யென்றே யிரு. (சு0எ)

எப்பொருளு மெவ்விடமு மெக்கால முந்தொழிலும்
தப்பினறி வன்றியிலை தங்குமிடம்—செப்பி
யறிவாகக் காணு யனைத்துயிருங் காணில்
அறிவன்றி யுண்டோ வயல். (சு0அ)

அனுமானந் தர்க்க மறையிற் பெருகும்
மனனத்தாற் ருமே மதித்துத்—தனுவாதி
சங்கற்பத் தோற்றத் தடையறுக்க வல்லானுக்
கிங்கற்ப மைய மிலை. (சு0கூ)

சத்தமுத லைந்துலகந் தன்னிலுதித் தேமறையும்
சத்தமுத லைந்துஞ் சடமன்றோ—சத்தாய்
இருக்குமறி வன்றோநா மில்லாத நேரம்
இருப்பதுதா னுண்டோ விசை. (சுகய)

நிதித்யா சனந்தா னிலையோக மைந்தாம்
மதிக்கிலவை மந்திரமு மாயை—சிதைக்கும்
பரிசமுடன் பாவம் பழுதிலபா வத்தோ
டரியர்மா யோகமென லாம். (சுகக)

மந்திரந்தான் யாதென்னின் மாவாக் கியமாதி
மந்திரத்தை யுச்சரிப்பான் மானதமும்—அந்தமுதல்
எல்லாம் பிரமத்தி லென்று முறைந்திருக்கை
நல்லோ ரறைவார் நயந்து. (சுகஉ)

பிறப்புப் பிணிமூப்புப் பேராச்சாக் காடு
மறக்கார்க் கனுபூதி மன்னும்—மறக்கில்
ஒருபோது மின்பமிலை யோராதார்க் கின்பங்
கருதிவிது நாமே கரி. (சுகரு)

பரிசந்தான் யாதெனிற் [illegible]ப்ப
ணரிதாகு மானம்வெளி யாங்கே—பிரியாமற்
கண்டுணர்ந்து நிற்கையெனக் கற்றுணர்ந்தோர் செப்பமிகக்
கண்டுணர்ந்து நிற்பாய் கனிந்து. (சகச)

பாவயோ கந்தானே பன்னுதற் கஞ்சிரமா
மேவு திசைச்செவியா மேலாகத்—தாவுகதிர்ச்
சந்திரனுஞ் சூரியனுஞ் சாற்று மிருவிழியா
நந்துமறை நன்முகமா நாடு. (சகரு)

வானுந்தி பூமியடி மன்னு விராட்சொருபந்
தானுன்னி யொவ்வொன்றுத் தள்ளியே—தானவ்
வவயவியைக் கண்டுறங்க லாமென்பர் மேலோர்
பவவலிமைக் கஞ்சியே பார். (சகசு)

அபாவயோ கந்தா னனுகாப் பிரமத்
துபாதி யனைத்து மொருவிச்—சுபாவநிலை
கண்டிரங்க லென்றுணர்ந்தோர் கண்டுரைப்ப ரிந்நிலையைக்
கண்டுகளிப் பார்க்கே கதி. (சகஎ)

உன்ன லொழித லுணராமை யுற்றுணர்தல்
என்னு மிவற்றிலகு மேகவொளி—தன்னை
யெவற்றி னிடையு மெவையுந்தன் னுட்கண்
டவத்தை யிறத்த லறி. (சகஅ)

இதுதான்மா யோகமென விவ்வாறு காணின்
அதுவிதுநா னென்னும லாவார்—இதுபோலு
முத்திநெறி யில்லையான் மூதுணர்ந்தோ ராயுங்கால்
இத்திறங்கண் டுய்வா ரிலை. (சககூ)

அறிவாகத் தன்னை யறிந்தாலும் போகாச்
செறிவாம் விடயச் செருக்கை—யறிதோர்
பிரதிபந்த மூன்றுப் பிரித்துரைப்பர் நல்லோய்
திரவறிவாற் கேட்டுத் தெளி. (சஎ0)

பூத பவுதிகமும் போன்றுவாத்த மானமெனல்
பூதப் ரதிபந்தம் போனசுகக்—காதல்
இழுத்துழற லென்ப ரிவர்பௌதி கந்தான்
அழுத்தல்வரு போகத் தறி. (௪௨௧)

வர்த்தமா னந்தான் வனிதாதி கண்டலைதல்
அர்த்தமிது வென்றே யறுதியாற்—சற்கருமத்
திவ்வனர்த் தந்தீங் கியம்புஞ் சமாதியிரண்
டவ்விரண்டுஞ் சொல்வே னறி. (௪௨௨)

சவ்விகற்ப நிர்விகற்பஞ் சாற்றினிவை மும்மூன்றும்
எவ்விகற்ப மாற்றுமவை யென்னையெனிற்—றிவ்வியநற்
சத்தானு வித்தமொடு சாற்றுந் திரிசயமும்
ஒத்ததுவே நிர்விகற்ப மோர். (௪௨௩)

சித்தானு வித்தந்தான் றன்னைத்தா னுக்காணல்
மித்தைத் திரிசியந்தான் மெய்யுணர்வில்—எத்தனையும்
கான லதுவாகுங் கண்டவற்றை மெய்யுணர்வாக்
கான னிருவிகற்பங் காண். (௪௨௪)

நம்மைவிகற் பித்துணரி னுமவ்வா றுத்தடிப்போம்
நம்மைநே ராக்காணி னுமாகேம்—நம்மை
பசுபதி பாசப் பகுப்பாக்கிக் கெட்டோம்
நிசவிழிப்பா லுண்டோநீ நேர். (௪௨௫)

அகம்புறமென் றில்லாம லாயுங்கான் மாயும்
அகமமதை யென்றிரண்டு மாயிற்—சகமாதி
தோற்றுத நில்லாது தோற்றினு லுஞ்சித்தே
மாற்றினுர்க் குண்டோ மயல். (௪௨௬)

சமாதி யிலக்கணம்போற் சாட்சாத்கா ரத்தை
புமானுய்யப் போதிக்கிற் போதஞ்—சமாதிநிலை
யெல்லாங் கடந்தோர்வோ யென்மயக்கந் தீர்த்தியென
நல்லோ னறைவா னயந்து. (௪௨௭)

சீவன் விதேகம் தெ[illegible]யர்
சீவன்முத்தி யாதென்னிற் செப்புவன்யான்—சீவன்
அறிவே வடிவா யனுதினமுந் தன்னைப்
பிறிதாகக் காணாமை பின். (௪௨௮)

எப்பொருளு மெவ்விடமு மெவ்வாறுந் தோற்றிடினு
மெய்ப்பொருளாக் கண்டொளிர்தன் மெய்யறிவு—தப்பி
விடினுஞ் சுகமிழுத்து மெய்யறிவ தாக்குந்
தொடுமோ விடயசுகஞ் சொல். (௪௨௯)

அடிப்பானை தட்ட வடுக்கென்ன வீழும்
அடிப்பானை காணத் தனையும்—தடிப்பின்றி
யெல்லாஞ் சுயஞ்சோதி யேகவடி வாய்க்காணல்
இல்லாத நேர மிலை. (௪௩௦)

உறக்கம் விழிப்புண் டுடல்வடிவ மாயின்
உறக்கம் விழிப்பெங்ங னுண்டாம்—மறப்பற்றுச்
சித்துவடி வாயிற் சிதையா தவத்தைதொறும்
ஒத்தே யிருந்தறிவ தோர். (௪௩௧)

அறிவன்றி நானுண் டகம்புறத்தை யேற்கில்
அறிவில்லாச் சீவருள ராயின்—அறிவன்றி
நானென்ப தில்லையா னென் றறிவுறைக்கும்
நானறிவென் றின்றுணர்ந்தே னன். (௪௩௨)

நானே யனைத்தாவ னனைத்து மாகாவே
நானென்ப தென்னபொரு ளாங்கால்—நானே
விசுவாதி யானே விவகாரி காதி
நசியெ னவைபோல நான். (௪௩௩)

நின்றாலுஞ் சென்றாலு நீங்காச் சுகித்தாலுந்
தின்றாலுஞ் செய்கைபல செய்தாலும்—ஒன்றே
யலவெனினு மாமெனினு மையந் திரிபிந்
நிலையெட்டி ராமையென நேர். (௪௩௪)

என்னையான் பல்[illegible]றியெனை
யன்னியமாக் கண்டலைந்தே ஞயுங்கால்—இன்ஞனென்
றிப்போ தெனைக்கண்டே னேகவெளி யாயறிவாய்
எப்போது மாருமை யென். (௪௩௫)

எல்லாமா யல்லவுமா யிப்போ தெனைக்கண்டேன்
எல்லாமா யாயினன்றே வல்லவெனல்—இல்லையே
என்னையா னுற்றுணரி னென்றே யிடங்கொண்டே
னன்னியமொன் றில்லாமை யால். (௪௩௬)

செயலனைத்துஞ் செய்துஞ் செயலில்லா தேது
நயந்துநய வாததெது நானென்—றயலின்றித்
தன்மயமாய் நிற்பதெது தானே யதுவாதல்
நன்குணர்ந்தோம் நால்வகையா நாடு. (௪௩௭)

பிரமவித் தேவரனும் பேசுவரி யானும்
அரிதாம் வரிட்டனுந்தா னுவர்—தெரியின்முத்
தாவான் குடும்பத் தழுந்திப் பலசெயினும்
மேவான் விருப்பமதின் மேல். (௪௩௮)

விருப்பமிலா னெம்முயற்சி வேண்டிச்செய் வானேன்
விருப்பம் வினோதமன்றி வேண்டான்—விருப்புற்றுப்
பாம்பல்ல வென்றுகண்டான் பாவித் தழுதாலும்
பாம்பழுகை மெய்யோநீ பார். (௪௩௯)

தோற்ற முருவேடம் தொலையா விடஞ்செய்கை
சாற்றுமிவை பந்தமெனத் தான்றவிர்ந்து—காற்றிற்
றிரிவான் வரனென்பர் தீர்ந்தவிடங் கண்டார்
திரிவானே னென்றறையிற் றேர். (௪௪௦)

தோற்றமுத லைந்துந் தொடரா தெனவேண்டித்
தோற்றமுத லைந்திற் சுழல்வானேன்—தோற்றத்தைக்
காணு மறிவடிவாய்க் கண்டார்க் கிடமெங்குங்
காணுமகப் போலுழல்வர் காண். (௪௪௧)

வரியானோ வென்னில் வருபோகந் தன்னற்
றெரியான் பிறராத் தெரிவான்—றெரிவன்றிக்
காணான் பிறிதொன்றுங் காணின்வே றுயவற்றைப்
பேணான் றனையன்றிப் பின். (௪௪௨)

வரிட்டனோ வென்னில் வரும்போகந் தன்னைத்
தெரிவித்தா லுந்தெரியான் செப்பான்—இருக்குநிலை
என்று லுயர்வொப் பிழிவில்லை யன்னோனுக்
கின்றே பிறப்பிங் கினி. (௪௪௩)

சிவன்முத்தி நால்வர்நிலை செப்பினது போலுணர்த்தாய்
தாவில்விதே கத்தினிலை தான்கேட்கின்—மூவருக்கும்
எட்டாத வல்லமனே யிங்கிதற்கு மேற்கோளாம்
தட்டா நிலையதனாற் றான். (௪௪௪)

மாறும விந்நிலையின் மன்னிச் சுகிப்பார்கள்
மாறுப் பதவிநிலை வந்தாலுஞ்—சீறார்
சரியைகிரி யாயோக சாதனத்தான் ஞானந்
தருமிந் நிலையிங்கு தான். (௪௪௫)

வேடங் குணஞ்செய்கை வேறுநா னன்றென்னின்
நாடுங்கா லாமல்ல நானன்றே—தேடி
எனையெங்குங் காணளவு மிம்முயற்சி வேண்டும்
பினைவேறிங் குண்டாயிற் பேசு. (௪௪௬)

எதார்த்தவாதம்

முற்றிற்று.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ச	உரு	கதம்புறம்	தகம்புறம்
கரு	கூ	னல்வெளி	னவ்வெளி
கஅ	கக	வித்தையிவை	வித்தையிவை
கக	ச	சிற்சொருபத்	சிற்சொருபத்
௸	உடு	புறம்பற்றித்தா னின்பமாகுங்கால்	புறம்பற்றுத் தானின்பமாயின்
உஉ	கரு	துலாதி	தூலாதி
௸	கச	ஞென்ருவே	ஞேன்ருவே
உரு	கக	காலத்தான்	காலந்தான்
உச	ச	சலம்	சகம்
உடு	உஎ	வாராதோ	வாராதோ
உசா	ரு	புறதேவ	புறதே
௩0	கஅ	முற்றிவு	முற்றறிவு